விலை ரூபா: 08.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 10 புதன்கிழமை (25.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 157

# திருமலை கரையோரப்பகுதி மக்கள் அச்சம் காரணமாக இடம் பெயர்வு

## வடக்குக் கிழக்கில் நாளை ஹர்த்தால்!

(திருமலை)

திருகோணமலையில் புதிதாக அமைக் கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றக் கோரி நாளை முதல் வடக்குக் கிழக்கில் பூரண ஹர்த்தாலை மேற்கொள்வதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீர்மானித் துள்ளது.

இக்ஹர்த்தால் குறித்து இன்று நடை பெறும் கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுபினர் என்.ரவிராஜ் தெரிவித்தார்.

இதேவேளை திருகோணமலையில் நாளை முதல் மீண்டும் ஹர்த்தால் அனுஷ் டிக்கப்படவுள்ளது. மக்களின் தேவைகளை பூர்த்திசெய்வதற்காக இன்று ஹர்த்தாலை மேற்கொள்ள வில்லை எனவும் நாளை முதல் ஹர்த்தால் தொடரும் என திருகோணமலை தமிழ்மக்கள் பேரவை அறிவித்துள்ளது. (ச-8)

## மூலைமுடுக்கெங்கும் படையினர் குவிப்பு

(திருமலை)

**திருகோணமலை நகரை அண்டிய கடற்கரைப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங் களை நோக்கிச் செல்கின்றனர்.**

**நகரின் திருக்கடலூர் மற்றும் கிருஷ்ணாபுரிக் கிராமங்களில் கடந்த ஞாயிறு அன்று பின்னிரவு வேளையிலும் திங்கள் அன்று அதிகாலை யிலும் இடம் பெற்ற குண்டு வீச்சு சம்பவங்களின் விளைவாகவே அக்கிராம வாசிகள் பாதுகாப்பு தேடி தங்களுடைய கிராமங்களில் இருந்து இடம் பெயர்ந்து உவர்மலை, சல்லி, செல்வநாயகபுரம் போன்ற பகுதிகளில் தஞ்சமடைந்து வருகின்றனர்.**

இது இவ்வாறிருக்க இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கலவரம் ஒன்றை ஏற்படுத் துவதற்கு சிங்களப் பேரினவாதிகள் முயன்று வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். மீண்டும் தமது பிரதேசத்தில் குண்டுகள் வெடிக்கக் கூடிய சூழ்நிலை காணப்படுவதாகத் தெரிவித்தே மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க திருமலை நகரில் எதிர்பார்க்கப்படும் (12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக்கு பதிலாக தேசிய சபை வழங்கலாம்-ஜே.வி.பி

(கொழும்பு)

ஆழிப்பேரலையின் பின்னர் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக உருவாக் கப்பட இருக்கும் பொதுக்கட்டமைப்பை எதிர்த்துள்ள ஜே.வி.பி அதற்குப் பதிலாக தேசிய சபை என்ற யோசனையை முன் வைத்துள்ளது.

ஜனாதிபதியின் தலைமையில் இயங் கவுள்ள இச்சபையில் நாடாளுமன்ற உறுப் பினர்கள், அரசாங்க அதிகாரிகள், வர்த்தக சமூகத்தினர் மற்றும் புத்தி ஜீவிகள் உள் ளடக்கப்படுவார்கள்.

இதேவேளை குறித்த தேசிய சபை யின் கீழ் உபகுழுக்கள் அமைக்கப்படும். இதில் அமைச்சர்கள், அரசாங்க அதிகாரி கள் அங்கம்வகிப்பர். இந்த நிலையில் பிரதேச செயலர்கள், மாவட்டக் குழுக்கள் மற்றும் (12ஆம் பக்கம் கபார்க்க)

## தென்மராட்சியில் மீளக் குடியமர்த்தக் கோரி

## ஏ-9 வீதியை வழிமறித்து யூன் 11 இல் போராட்டம்

(திருநெல்வேலி)

தமது சொந்த இடங்களில் மீளக்குடி யமர்த்த அனுமதிக்குமாறுகோரி தென்ம ராட்சி மக்கள், ஏ-9 வீதியை வழிமறித்து எதிர்வரும் 11ம் திகதி மறியல் போராட் டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தென்மராட்சி பொதுஅமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் அருந்தவபாலன் தலை மையில் மருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நேற்று நடைபெற்ற மீள்

சொந்த இடங்களில் மீளக்குடியமர முடி யாத நிலையில் உள்ளனர்.

அத்துடன் தமது சொந்தத்தொழில் களை மேற்கொள்ளமுடியாமல் மிகவும் வறிய நிலையில் உள்ளனர். இந்நிலை மாறி மக்களின் இயல்புவாழ்க்கையை ஏற் படுத்துமாறு கோரி வீதி மறியல் போராட் டத்தில் ஈடுபடப்போவதாக தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரி வித்துள்ளது.நேற்று நடைபெற்ற இக்

## சட்டவிரோத ஆயுதங்களை களைய பொலிஸார் விசேட நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் சட்டவிரோதமான முறை யில் பாவிக்கப்பட்டுவரும் ஆயுதங்களை பறி முதல் செய்யும் விசேட திட்டம் ஒன்றை உருவாக்கவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பொர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம் பெறும் குற்றச்செயல் களில் 20முதல் 25வீதம் வரையில் சட்ட விரோத ஆயுதங்கள் மூலமே இடம்பெற்றுவரு கிறது. இராணுவத்தில் இருந்து தப்பியோடி யவர்கள், பாதாள உலகக்குழுவைச்சேர்ந் தவர்கள் மற்றும் பாரிய குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் சட்டவிரோத ஆயுதங்களை பயன்படுத்துவதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக சட்டவிரோத ஆயுதங்களை கைப்பற்றுவதற்கு ஹம்பகா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கை கள் வெற்றியளித்துள்ளதாகக் கூறிய பொலிஸ்மா அதிபர் ஏனைய மாவட்டங் களிற்கும் இதனைச்செயுற்படுத்த உத்தேசித் துள்ளதாக மேலும் கூறினார். (ச-4)

தென்மராட்சி பொதுஅமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் அருந்தவபாலன் தலைமையில் மருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நேற்று நடைபெற்ற மீள் குடியமர்வு தொடர்பான கூட்டத்தில் முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் 'குறிப்பிட்ட சில பகுதிகளைச் சேர்ந்த 'மக்கள் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக நீண்டகாலமாக தமது படுத்துமாறு கோரி வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.நேற்று நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழ்த்தேசியகூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சிவநேசன், என்.கே.சிவாஜிலிங்கம், என்.ரவிராஜ், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-43)

விரோத ஆயுதங்கள் மூலமே இடம்பெற்றுவருகிறது. இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள், பாதாள உலகக்குழுவைச்சேர்ந் பொலிஸ்மா அதிபர் ஏனைய மாவட்டங்களிற்கும் இதனைச்செயுற்படுத்த உத்தேசித்துள்ளதாக மேலும் கூறினார். (ச-4)

# ஜனாதிபதியை சந்திப்பதற்கு மக்கள் ஐக்கிய முன்னணி விருப்பம்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உத்தேசப்பொதுக்கட்டமைப்பு தொடர்பாகவும் அரசாங்கத்தை பாதுகாப்பது தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு விரைவில் சந்தர்ப்பம் ஒன்றினை வழங்குமாறு ஜனாதிபதியிடம் மக்கள் ஐக்கிய முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே கட்சியின் பொதுச்செயலாளர் பியசேன திசாநாயக்க இந்தக்கோரிக்கையினை விடுத்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு, இறைமை, நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு தற்போது தோன்றியுள்ள நெருக்கடிகள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்தஇருப்பதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தேச (12ஆம் பக்கம் பார்க்க)

# பொலநறுவையில் சூடு இளம் குடும்பஸ்தர் பலி

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டம் மன்னம்பிட்டியவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதேஇடத்தைச் சேர்ந்த நாகப்பா சிவராசா (வயது 29) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் ஹோட்டல் ஒன்றில் சிபந்தியாக தொழில் புரிந்து வந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.நேற்று முன்தினம் இரவு குறிப்பிட்ட ஹோட்டலுக்கு முன்பாக வழமைபோல் வாடிக்கையாளர்களுக்கு றொட்டி தயாரித் துக்கொண்டிருந்த சமயம் அங்கு வந்த அடையாளம் தெரியாத சிலர் இவரின் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தபின்னர் மோட்டார்சைக்கிளில் தப்பித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்ததாக கூறப்படும் இந்த நபர் 3வருடங்களுக்கு முன்னதாக அந்த அமைப்பில் இருந்து விலகி இயல்புவாழ்க்கை வாழ்ந்ததாக அப்பிரதேச வாசிகள் தெரிவித்தனர். இக்கொலை தொடர்பான ஆரம்பவிசாரணைகளின்படி கொலையாளிகளோ அல்லது அதற்குப் பொறுப்பானவர்களோ இது வரை கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

EXPOAIR
your friend in the skies...

யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உடனடி நிவாரணப் பணியைவிட கனேடியர் அடிப்படை விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் நாட்டம்

## கனடா உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக நாடுகளில் வாழ்கின்ற சிறுவர்களின் உரிமைகள் பேணப்பட்டு அவர்களின் உரிமைகள் மேம்பாடையச் செய்யவேண்டும் என்பதில் கனடா சர்வதேச அபிவிருத்தி அமைப்பு மிகுந்த அக்கறையும் ஆர்வமும் காட்டிவருகின்றது.

இந்த வகையிலேயே எமது அமைப்பு சர்வதேச பயிற்சி நிதியத்தின் மூலம் அதன் பங்காளித்துவ அமைப்புக்கள் ஊடாகவும் சிறுவர் உரிமைகள் தொடர்பான செயல்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. இச் சிறுவர் உரிமைகள் திட்டம் நிவாரணத்தை அடிப்படையாகக்கொண்டதல்ல.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த கனடா உயர்தானிகராலயத்தின் அபிவிருத்தி ஆலோசகரான ஜோனதன் வீற்கிறாவ்ற் பருத்தித்துறையிலுள்ள உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தில் இடம்பெற்ற சர்வதேச பயிற்சி நிதியத்தின் பங்காளித்துவ நிறுவனப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் குறிப்பிட்டார்.

சர்வதேச பயிற்சி நிதியத்தின் யாழ்ப்பாண மாவட்ட உதவி இணைப்பாளர் எஸ்.மயூரன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கனடா உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதி செல்வி அன்ரியா, செல்வி காமிளா மற்றும் பயிற்சி நிதியத்தின் பிரதிநிதி எம்.பாலதாசர் ஆகியோரும் பங்குகொண்டிருந்தனர்.

அபிவிருத்தி ஆலோசகர் ஜோனதன் வீற்கிறாவ்ற் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உடனடி நிவாரணப் பணியில் ஈடுபடுவதற்கு கனேடியர்கள் இப்போது அதிகளவில் ஆர்வம்காட்டுவதில்லை. அடிப்படையில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி நல்ல சமுதாயத்தை உருவாக்குவதிலேயே அவர்கள் நாட்டம் கொண்டுள்ளனர். நான் யாழ்ப்பாணத்துக்கு இம்முறை இரண்டாவது தடவையாக. வந்துள்ளேன். சிறுவர் உரிமைகள் தொடர்பான செயல்பாடுகளை சீடா நிறுவனம் சர்வதேச பயிற்சி நிதியம் மூலம் இங்கு முன்னெடுத்து வருகின்றது.

எமது அபிவிருத்தி நிதியில் குறிப்பிட்டளவு நிதியை ஒதுக்கீடு செய்து பாடசாலைப் பிள்ளைகளுக்கான கல்வி உபகரணங்கள் மற்றும் சீருடைகளை நாம் அடையாளமாக வழங்கியுள்ளோம் என்றார்.

இக் கலந்துரையாடலைத் தொடர்ந்து பருத்தித்துறை சிவகுரு வித்தியாலயத்திற்கு விஜயம் செய்த சீடா நிறுவனத்தின் அபிவிருத்தி ஆலோசகர் ஜோனதன் அங்கு, 50 பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் சீருடைகளை வழங்கி வைத்தார்.

இவ் வைபவத்தின்போது மாவட்ட சிறுவர் பாதுகாப்புச்சபை யாழ்ப்பாணம் செயல்பாட்டுக்குழு, சுகவாழ்வு நிலையம், பெண்கள் அபிவிருத்திமையம் மற்றும் அறவழிப் போராட்டக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்கு கொணடிருந்தனர். (ற-16)

## சிறுவிளம்பரம்

### தேவை

ஓட்டுநர், லொறி பொடிவேலை செய்பவர் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. க.சிவலிங்கம், சிவலிங்கம் மோட்டேர்ஸ், 77, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.

(9569)

## மூக்குக்கண்ணாடி வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள சர்வதேச லயன்ஸ் கழகங்களில் ஐந்து கழகங்கள் 2004/2005 லயனிய ஆண்டில் கண்பார்வை குறைவான வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு 2 ஆயிரத்து 667 மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கியுள்ளன.

வடமராட்சி லயன்ஸ் கழகம் 941 மூக்குக் கண்ணாடிகளையும், சாவகச்சேரி கழகம் 850 கண்ணாடிகளையும், மானிப்பாய் வட்டக் கழகம் 750 கண்ணாடிகளையும், மன்னார் கழகம் 76 கண்ணாடிகளையும் வட்டுக்கோட்டை கழகம் 50 கண்ணாடிகளையும் வழங்கியுள்ளன.

(க-16)

# மின்சார சபை வாங்கிய கடனை தேசிய கடனாக ஒதுக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை கடன் பட்டுள்ள 89 மில்லியன் ரூபாவை தேசிய கடனாக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கடன் பழுவிலிருந்து இலங்கை மின்சாரசபையை மீட்டெடுப்பதே இதன் நோக்கமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய திட்டத்தின்கீழ் மின்சாரசபையை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றவுள்ளதாக நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் ஒவ்வொரு அலகிற்குமான செலவினத்தை இரண்டு ரூபாவினால் குறைக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சகல பேதங்களையும் மறந்து மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு நாட்டின் அபிவிருத்தியை 8 வீதத்தால் அதிகரிக்க வேண்டும் எனவும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே நிதியமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். (க-9)

# பெருந்தோட்டங்களில் மாற்று பயிர்ச்செய்கை

## தடுக்கமுடியாது என்கிறார் அமைச்சர் முத்துசிவலிங்கம்

பெருந்தோட்டங்களில் மாற்றுப் பயிர்சசெய்கை செய்வதை தடுக்க முடியாது என தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டங்களில் தேயிலைக்குப் பதிலாக கிழங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவது, தேயிலை வளத்தை அருகச்செய்வதுடன் சுற்றாடலுக்கு மாசு ஏற்படுத்துகின்றது எனப் பலரால் குற்றம் சுமத்தப்படுகின்றது.

இதன் காரணமாக தோட்டத்துறை தொழிலாளர்களுக்கான தொழில் நாட்கள் குறைந்து அவர்களின் வருமானத்திலும் தாக்கம் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த நிலையில் இதனை தடுக்க ஏதாவது வழிகள் உள்ளனவா? என்பது ஊடகவியலாளர்கள் வினாவியபோதே அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே அரசாங்கமும் தோட்ட நிறுவனங்களும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்கீழ் தோட்டக்காணிகளை உப குத்தகைக்கு கொடுக்கலாம் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் அதனை கட்டுப்படுத்த முடியவில்லையெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-9)

# இராசிபலன்

**25.05.2005**
**(வைகாசி 12, புதன்கிழமை)**
**சித்தம் பிற்பகல் 02.32 மணிவரை**
**துதியை முன்னிரவு 10.25 மணிவரை**
**இராகுகாலம் 11.52- 1.22 மணிவரை**
**சுபநேரம் 4.22 - 05.52 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | புதிய தொழில் சிந்தை, ரோக நிலை, காரிய தாமதம். |
| இடபம் | ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், அதிஷ்டக் குறைவு, வீண் மனஸ்தாபம். |
| மிதுனம் | செல்வாக்கு, குடும்பமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, சத்துருஜெயம். |
| கடகம் | உற்சாகம், காரிய அனுகூலம், உறவினர் சந்திப்பு, மனச்சிந்தை. |
| சிங்கம் | ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், வியாபார விருத்தி, தாழ்ந்த சுபாவம். |
| கன்னி | சத்துருஜெயம், வேலையில் ஆர்வம், காரிய தாமதம், மனப்பயம். |
| துலாம் | சகோதரர் மகிழ்ச்சி, தேகநலன், பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | எடுத்த கருமங்கள் தாமதமாகும், மாதர் நட்பு, பிரயாணம், விவாதம். |
| தனுசு | சயன சுகம், முயற்சி கைகூடும், பெரியோர் உதவி, தொழில் சிந்தை. |
| மகரம் | அமைதிக்குறைவு, நண்பர்கள் சந்திப்பு, சுப செலவு, காரிய அலைச்சல். |
| கும்பம் | முயற்சி கைகூடும், தொழில் நன்மை, கீர்த்தி, பெரியோர் உதவி. |
| மீனம் | புதிய திருப்பம், செய்தொழில் விருத்தி, போசனசுகம், நல்ல சம்பவம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

# மின்சாரசபை மறுசீரமைப்பிலும் ஜே.வி.பிக்குள் உட்பூசல்

மின்சாரம் மறுசீரமைப்பு விடயங்களில் அமைச்சர் லால் காந்தவுக்கும் துணை அமைச்சர் சோமவன்ஷ அமரசிங்கவுக்கும் கடுமையான கருத்துவேறுபாடுகள் இருப்பதாக கொழும்பு ஊடகமான சன்டேரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் ஜே.வி.பிதனது தொழிற்சங்கத் தலைமையை மாற்றியமைத்ததன் மூலம் இந்த மோதல் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

மறுசீரமைப்பு விடயத்தில் அரசுக்கு ஆதரவான நிலையை சோமவன்ஷ மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகவும் லால் காந்த தலைமையிலானோர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழப்பம் குறித்து சண்டே ரைம்ஸ்க்கு பேட்டியளித்த லால் காந்த, தான் தொழிற்சங்க தலைமைப் பொறுப்பிலேயே தொடர்ந்து நீடிப்பதாகவும் எவரும் தன்னை விலக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சோமவன்ஷவின் இத்தகைய நடவடிக்கைகள் சந்திரிகாவுக்கு ஆதரவான ஜே.வி.பியை உருவாக்கும் நோக்கம்கொண்டவை என்று கூறப்பட்டாலும் அமைதிப் பேச்சுக்கள் பொதுக்கூட்டமைப்பு போன்றவற்றில் தம்மை எதிர்க்க பிரதான எதிர்க்கட்சி ஒன்று இல்லாத நிலையில் ஜே.வி.பியை உடைத்து தனது நிலைகளை ஆதரிப்பதற்கு ஒரு பிரிவினரை உருவாக்குவதன் மூலம் இயல்பிலேயே ஜே.வி.பியின் மற்றொரு பிரிவின் எதிர் நிலை மேற்கொள்வதால் தமக்குப் பாரிய எதிர்ப்புகள் இருக்கிறது பாருங்கள் என்று சர்வதேச சமூகத்திடம் நல்லெண்ணத்தை வாங்கிக் கொள்ளும் சந்திரிகாவின் ஒரு தந்திரோபாய நடவடிக்கையா இது? இதற்கு ஜே.வி.பி பலிகடாவாகிவிட்டது என்றே சொல்ல [illegible] என்றும் தென்னிலங்கை அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ற-4)

# நடமாடும் வியாபாரங்களுக்கு பொதுமக்கள் மத்தியில் ஆதரவு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் நகரம், சாவகச்சேரி, சுன்னாகம் மற்றும் பருத்தித்துறை நகரப்பகுதிகளில் ஜப்பான், தாய்லாந்து, ஹொங்கொங், மற்றும் கொரியா நாட்டவர்கள் வீதிக்கு வீதியிலுள்ள சந்திகளில் கைக்கடிகார விற்பனையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

கைக்கடிகாரங்களின் விலைகளை ஆங்கிலத்தில் கூறியே விற்பனைசெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்களது வியாபாரத்துக்கு பொதுமக்கள் மத்தியில் ஆதரவு கிடைத்துவருவதைக் காணக் கூடியதாகவிருக்கின்றது.

இதேசமயம் இந்தியா தமிழ் நாட்டைச்சேர்ந்த சுமார் இருபதுக்கும் மேற்பட்ட ஆண்கள் சேலைவகை வியாபாரத்தில் நீண்டகாலமாக ஈடுபட்டுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

# வான் பள்ளத்தினுள் வீழ்ந்தது ஒருவர் பலி; 7 பேர் படுகாயம்

## தலவாக்கலவில் சம்பவம்

(கொழும்பு)

ஹட்டன் தலாக்கல பத்தன சந்திக்கு அருகாமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வான் ஒன்று பள்ளத்தினுள் விழுந்து விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 7பேர் காயமடைந்துள்ளனர்.

குறிப்பிட்ட வான் ஓட்டோ ஒன்றுடன் மோதி பாதையை விட்டு விலகி பள்ளத்தினுள் விழுந்ததிலேயே இவ் அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு கல்போவலவிலிருந்து சுற்றுலாக்குச்சென்ற வானே விபத்துக்குள்ளானது. என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த 7பேரும் நாவலபபிட்டி ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ற-8)

# சுனாமியால் வடமராட்சியில் 5 உபதபாலகங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

சுனாமிப் பேரலையின் காரணமாக வடமராட்சி கிழக்கில் இயங்கிவந்த ஐந்து உப தபாலகங்கள் பெரும் சேதங்களுக்குள்ளாகியுள்ளன என தபால் திணைக்களத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தவகையில் தாளையடி உப தபாலகம் செம்பியன்பற்று உப தபாலகம், சுண்டிக்குளம் உப தபாலகம். முள்ளியான் உபதபாலகம் ஆழியவளை உப தபாலகம் ஆகியவை சேதமடைந்தவைகளாகும்.

இதில் தாளையடி உப தபாலகம் வேறொரு கட்டடத்திலும் செம்பியன்பற்று உப தபாலகம், செம்பியன்பற்று வடக்கிலும், சுண்டிக்குளம் உபதபாலகம் உடுத்துறை இடம்பெயர்ந்தோர் முகாமிலுமாக ஜனவரி 19ஆம் திகதி முதல் இயங்கிவருகின்றன.

அதேவேளை, முள்ளியான், ஆழியவளை உப தபாலங்கள் அவற்றின் கட்டங்களிலேயே இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

# வனவள ,பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய நடவடிக்கை

(கொழும்பு)

வனவள அதிகாரிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு எடுக்க வேண்டிய மாற்று நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்து ஆராய்ந்து வருவதாக சுற்றாடல் இயற்கைவள அமைச்சர் எ.எச்.எம். பௌஷி தெரிவித்துள்ளார்.

இதன்படி முற்றுகை நடவடிக்கையில் ஈடுபடும் வனவள அதிகாரிகளின் பாதுகாப்பிற்கு என இராணுவம், பொலிஸ், அதிரடிப்படை என்பவற்றின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோல முற்றுகைகளில் ஈடுபடும் வனவள அதிகாரி களுககு ரி-56 ரகதுப்பாக்கிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பௌஷி தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும், வனவள அதிகாரியொருவரை சிலர் தாக்கியதைத் தொடர்ந்து இதன் அவசியம் அதிகரித்துள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பான பத்திரமொன்றை அமைச்சரவைக்கு சமாப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(க-9)

# பாடசாலை நேரத்தின் பின்னரும் கல்வி நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்குக!

## யூனியன் கல்லூரி மாணவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துளள தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள் கல்லூரி நேரத்தின் பின்னர் தம்மை கல்விநடவடிக்கைகளில் ஈடுபட கல்லூரிக்குச் செல்ல அனுமதிக்கவேண்டும் என பாதுகாப்புப் படையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அம் மாணவாகள் மேலும் கோரியுள்ளதாவது,

கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் கல்லூரி நலன்விரும்பிகள் யாவரையும் கல்லூரிக்கு வந்து போக அனுமதிக்க வேண்டுவதுடன், கல்லூரிக்கு வருகை தரும் மாணவர்களுக்கு சோதனை என்னும் பெயரில் தொந்தரவுகளை ஏற்படுத்தக்கூடாது என்றும் கோரப்பட்டுள்ளது.

எனினும் இம் மாணவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக சார்பான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரியவருகிறது.

(ந-16)

# சமுர்த்தி அமைச்சுக்கு அமெ. அரசு 510 கோடி ரூபாவை வழங்கியது

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கம் சமுர்த்தி, வறுமை ஒழிப்பு அமைச்சிற்கு 510 கோடி ரூபாவை வழங்கியிருக்கிறது.

இந்த நிதியுதவியைக் கொண்டு ஊவா தெற்கு, சப்ரகமுவ மாகாணங்களைச் சேர்ந்த 4 ஆயிரம் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட இருப்பதாக அமைச்சர் பவித்திர வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

கிராமிய மேம்பாட்டுத் திட்டம் அமுல் செய்யப்படும் ஆறு மாவட்டங்களில் பின்தங்கிய கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன் அவற்றில் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

வறுமை ஒழிப்பில் ஜனாதிபதி காட்டும் அக்கறையை அவ தானித்த அமெரிக்க அரசாங்கம் தாமாக முன்வந்து உதவி செய்திருபபதாக அமைச்சர் பவித்திர வன்னியாராய்ச்சி மேலும் தெரிவித்துள்ளார்.

(க-2)

## சமூகமளிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் தென்மராட்சியில் நடாத்தப்படும் இலவச ஆங்கில வகுப்பிற்கான பதிவினை மேற்கொண்ட மாணவர்களை இன்று 12.00 மணியளவில் (ஆங்கில வகுப்பு ஆரம்பிக்கவிருப்பதால்) வகுப்பிற்கு சமூகமளிக்குமாறு பேரவை அறிவித்துள்ளது. (க)


## திருஞான சம்பந்தர் குருபூசை

**காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில் எதிர்வரும் 26.05.2005 வியாழக்கிழமை காலை 8.00மணியளவில் மேற்படி ஆலயத்தில் திருஞானசம்பந்தர் குருபூசையும் தேவாரம் ஓதுதலும் அன்று மதியம் 12.00 மணியளவில் மாணிக்கவாசகர் மடத்தில் மகேஸ்வரர் பூசையும் நடைபெறும் என்பதனையும் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.**

**காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை**

(9570)


# முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை ஜேர்மன் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள் சகிதம் கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் சென்றிருந்த ஜேர்மன் தூதுவராலய அதிகாரி ஜோர்ஜ் ஸ்க்மிட்ற், ஜேர்மன் பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைச்சின் தென்னாசிய அதிகாரி சீலர், ஜேர்மன் நாட்டு தொழில்நுட்ப நிறுவனப் பிரதிநிதி பிரிமா ஆகியோர் முள்ளியவளையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஜேர்மன் நாட்டு நிறுவனத்துடன் இணைநது முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத் திட்டங்களான முன்பள்ளி, ஆரம்பப் பள்ளிப் பயிற்சி மையத்தையும், புதிதாக அமைக்கப் பட்டு வரும் சிறுவர் இல்லம் ஆகியவற்றுக்கான கட்டட வேலைகளைப் பார்வையிட்டு தங்களது திருப்தியைத் தெரிவித்தனா.

இதனையடுத்து தண்ணீரூற்றில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நிறுவப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தையும் பார்வையிட்டதைத் தொடர்ந்து சுனாமியால் பாதிககப்பட்ட முல்லைத்தீவு நகர் பகுதியையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகததின் சுனாமிக்குப்பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய உண்ணாப்புலவில் அமைக்கப்பட்ட இடைக்கால குடியிருப்பையும் பார்வையிட்டனர்.

தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் அங்கிருந்த பொது நோக்கு மண்டபத்தில் கூடியிருந்த மக்கள் மத்தியில் கருத்துரைகளை வழங்கிய ஜேர்மன் பிரதிநிதிகள் மக்களின் எதிர்பாப்புகளையும கேட்டறிந்து கொணடனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி தலைமையில் வேலைத்திட்டங்களைப் பார்வையிட்டிருந்த பிரதிநிதிகள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜியையும் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# வலைப்பந்தாட்ட இறுதியாட்டம் உடுவில் பி.செ.அணி வெற்றி

மருதனார்மடம இராமநாதன் மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் மாலை உடுவில் பிரதேச செயலக வலைப்பந்தாட்ட அணிக்கும் பருத்தித்துறை பிரதேச செயலகவலைப்பந்தாட்ட அணிக்கும் இடையிலான இறுதியாட்ட நிகழ்வுகள் நடைபெற்றது.

ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணி 3 புள்ளிகள் வித்தியாசத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை வெற்றி பெற்றது.

போட்டி முடிவடைந்த பின்னர் நடுவர்கள் வீடு செல்வதற்காக பஸ் தரிப்பிடம் சென்ற வேளை பருத்தித்துறையைச் சேர்ந்த மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குழு ஒன்று அவர்களைத்தகாத வார்த்தைகளால்பேசியதோடு விளையாட்டு உத்தியோகத்தர்களையும் அச்சுறுத்திச் சென்றதாக யாழ் மாவட்டவிளையாட்டு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலக அணி உடுவில் பிரதேச செயலகஅணியிடம் தோல்வியடைந்ததன் எதிரொலியாகவே இச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இச் சம்பவத்தை அடுத்து அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெறவிருந்த பெண்களுக்கான எல்லே போட்டி நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ந-19)

# சிப்காட் அகதிகள் முகாமிலிருந்த 60 இலங்கையரைக் காணவில்லை

(திருவள்ளூர்)

கும்மிடிப்பூண்டி சிப்காட்டில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருந்தவர்களில் 60 பேர் காணாமல் போயுள்ளமை கண்டுபிடிக்கபபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சிப்காட் காவல் நிலைய எல்லையில் உள்ளது திறந்த வெளி இலங்கை அகதிகள் முகாம். இம் முகாமில் 566 குடும்பங்களைச் சேர்ந்த 2530 பேர் தங்கியுள்ளனர். 1820 குடும்பப் பதிவு அட்டைகள் இம் முகாமில் உள்ளோருக்கு வழங்கப்பட்டுள்ளன.இம் முகாமில் வெளியாட்கள் எவரேனும் தங்கியுள்ளார்களா? என பொலிஸார் சந்தேகித்தனர்.

இதையடுத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவுப்படி பொன்னேரி காவல் துணைக் கண்காணிப்பாளர் முத்து நல்லியப்பன் தலைமையில் கும்மிடிப்பூண்டி காவல் நிலைய ஆய்வாளர் சந்திரன், சிப் காட் காவல் உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன், தனிப்பிரிவு தலைமைக் காவலர்பிரபாகரன் மற்றும் பொலிஸார் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு அம் முகாமில் திடீர் சோதனை நடத்தினர்.

ஒவ்வொரு வீடாகச் சென்று விசாரணை நடத்தியதில் 25 பேர் பதிவு செய்யாமல் தங்கியிருப்பதுடன் இவர்கள் வேறு இடத்தில் அமைந்துள்ள இலங்கை அகதிகள் முகாமில் இருந்து இம்முகாமில் வசிப்பவர்களைத் திருமணம் செய்து கொண்டவர்கள் எனவும் தெரியவந்தது.

இவர்கள் தம்மைப் பதிவு செய்யக்கோரி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அளித்துள்ளனர். ஆனால், இதுவரை அதிகாரிகள் பதிவு செய்யாமல் உள்ளதாக புகார் எழுப்பியுள்ளனர்.மேலும் இம் முகாமில் இருந்து 60 பேர்காணாமல் போயிருபபது தெரிய வந்துளளது. இதுபற்றி பொலி ஸார் வசாரணை நடாத்தி வருகின்றனர். (ற)

## சுனாமிப் பேரலையால் பாதிப்புற்ற

# பாடசாலைகளைப் புனரமைக்க ஜப்பான், ஜேர்மன் முன்வருகை

சுனாமிப்பேரலையின் காரணமாக வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் சேதமடைந்த பதினொரு பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு ஜப்பான், ஜேர்மன் நாடுகளின் அரசாங்கங்கள் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் ஆழியவளை சீ.சீ.ரீ மகாவித்தியாலம், செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழக கலவன்பாடசாலை, கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலை,மாமுனை தமிழக்கலவன் பாடசாலை, மணல்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, வல்வை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, வல்வை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, வல்வை சிவகுரு பாடசாலை, குடத்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகள் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

(க-16)

# மண்டைதீவுக்கு மின்சாரம் வழங்க பிரதேச சபை நடவடிக்கை

(வேலணை)

மண்டைதீவுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை வேலணை பிரதேசசபை மேற்கொண்டுள்ளது.

இதற்கான நிதியை மின்சார சபைக்கு பிரதேசசபை வழங்கியுள்ளது.

இகேவேளை கடங்க 15 வருடங்களாக இயங்காமல் இருக்கும் வேலணைப் பிரதேச சபையின் மண்டைதீவு உப அலுவலகத்தை இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக சபையின் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தெரிவித்துள்ளார்.

(ந)


## சிறு விளம்பரம்

**மலயாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகினறவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 -**
**இரவு 8.30 வரை**

(9567)

**பிரத்தியேக கணனி பயிற்சி வகுப்புகள்**

இந்தியாவிலிருந்து வந்திருக்கும் கணனி விரிவுரையாளரினால், visual Basic, C, C++, Hard Ware, DTP, M.S Office ஆகிய பயிற்சிகள் பிரத்தியேகமாக வழங்கப்படும்.

**B.Sureshkumar,**
**Near Bank of Ceylon**
**Chankanai,**
**T.P- 077-6176476**

(C-9568)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

கலாநிதி செ. திருநாவுக்கரசு 1

சிறந்த பேச்சாளரும் எழுத்தளாருமாகிய கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு ஈழத்திருநாட்டில் இணையில்லாத ஒரு கல்வியாளருமாவார்.

தனது சுய முயற்சியினால் படிப்படியாக பண்டிதர், சைவப்புலவர், இளங்கலை மாணி, முதுகலைமாணி, கலாநிதி பட்டங்களைப் பெற்றதோடு முகாமைத்துவ டிப்ளோமா, பட்டப்பின் கல்வி டிப்ளோமா அதிபர் தரம்2-1 தேர்வுகளிலும் சிறப்பாக சித்தி பெற்றுள்ளார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றி வரும் இவர் தடம் பதிக்காத துறைகளே இல்லையெனலாம். ஆரம்பத்தில் சாதாரண ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்த இவர் ஒன்றன் பின் ஒன்றாக மேற்குறிப்பிட்ட பட்டங்களைப் பெற்று தமது வழமையான கற்பித்தல் பணிக்கு மேலாக பட்டப்பின் படிப்பு படிக்கும் பலருக்கு வழிகாட்டியாக விளங்குகிறார். எதையும் சுருங்கக்கூறி விளங்க வைக்கும இவரது கை வண்ணத்தை அவரது ''ஈழத்தின் தேசிய இனப்பிரச்சினைகள்'' என்ற இக் கட்டுரையிள்காணலாம்.

பண்டைக்காலம் தொட்டே இலங்கைத்தீவானது சிங்கள, தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டு வந்துள்ளது. வல்லமையுள்ள சிங்கள அரசானது ஆதிக்கத்தின் கீழ் தமிழர்களும், அதே போன்றுவல்லமையுள்ள தமிழ் அரசனது ஆதிக்கத் தின் கீழ் சிங்களவர்களும் கட்டுப்பட்டு வாழ்ந் ததை வரலாறு உணர்த்துகிறது. அவ்வப் போது. அரசர்களின் ஆட்சியின் எல்லையும் ஆதிக்க மேன்மையும் மாறுபாடுகளைக் கொண்டதாகவே விளங்கியது. இருப்பினும் 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பியர் இலங்கையின் காலடி எடுத்து வைத்தபோது,வடக்கே தமிழரசாகிய யாழ்ப்பாண இராச்சியமும்,மேற்கே கோட்டை இராச் சியமும், மத்தியில் கண்டி இராச்சியமும் நிலை பெற்றிருந்தன.

ஆங்கிலேய ஆட்சியின் போது தான் நிர்வாக வசதிக்காக இலங்கை முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆனால் பிரித்தானி யர் 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கையை ஆளும் உரிமையை இலங் கையரிடம் கொடுத்தபோதுதான் சிறுபான்மை இனங் கள் ஓரங்கட்டப்பட்டன. இலங்கையின் சுதந்திர மானது பெரும்பான்மை சிங்களவர்களே அனு பவிப்பதற்குரியதாகவும், இலங்கைத்தமிழர் இந்தியத்தமிழர் முஸ்லிம்கள் ஆகியோருக்கு மறுக்கப்பட்டதாகவும் நடைமுறைகள் உணர்த்தத்தொடங்கின. அன்றிலிருந்தே இலங்கைத் தேசியமானது படிப்படியாக சிங்களத்தேசியம், தமிழத்தேசியம் என மாற்றம் காணலாயிற்று. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைகளும் வளரலாயின. ஆளும் அதிகாரம் சிங்கள பௌத்த மேலான்மையுடன் செயற்பட ஆரம்பித்தது. அதற்கெதிரான தமிழத்தேசிய போராட்டங்கள் யாவும் அடக்கிஒடுக்கப்பட்டன. சாத்வீக ரீதியிலான முயற் சிகள் வெற்றியளிக்காமல் போகவே, ஆயுதப்போராட்டத்தினை தமிழ்த்தேசிய வாதிகள் முன்னெடுத்தனர். இதன் காரணமாகக் கடந்த கால் நூற்றாண்டு காலமாக இலங்கையானது இன முரண்பாடுகளினால் இரத்த பூமியாகக் காட்சியளிக்கிறது. 2002ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் கூட மக்களது இயல்பான வாழ்க்கை நிலை திரும்பவில்லை. நீறு பூத்த நெருப்பாகவே அரசியல் சூழ்நிலை காணப்படுகின் றது. இந்த நிலையில் ''இலங்கையின் இனப்பிரச்சினைகள்'' பற்றி வரலாற்று ரீதியான ஆய்வுப்பண்புடன் இந்தத் தொடர் கட்டுரை எழுதப்படுகிறது. இக்கட்டுரையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான வலுவான காரணிகள் இனங்காணப்பட்டுள்ளன.

## தேசிய இனப்பிரச்சினைகள்

ஒரு நாட்டிலுள்ள பல்தேசிய இனங்தள், பெரும்பாலும் மொழியை முதன்மைப்படுத்தி, மொழி, மதம், இனம், சாதி,பண்பாடு,பொருளாதாரம் போன்ற இன்னோரன்ன காரணிக ளுக்கு பிணக்குறுவதனால் ஏற்படும் பிரச்சினைகளே தேசிய இனப்பிரச்சினைகள் என அழைக்கப்படுகின்றன.

உலகமானது பரந்து விரிந்து கிடந்த போதிலும், உறவுகளின் நெருக்கத்தினால் சுருங்கியும் காணப்படுகின்றது. இன்றைய உலகில் இரு நூறுக்கும் மேற்பட்ட நாடுகளே இருக்கின்றன. ஆயிரத்திற்கும் அதிகமான தேசிய இனங்கள் இந்நாடுகளில் வாழு கின்றன. இந்த வகையல் பார்க்கும்போது, உலகமானது பல்தேசியவின அரசுகளைக் கொண்டதாகவே அமைந்துள்ளதெனலாம். உலகில் உள்ள நாடுகளில் தொண்ணூறு வீதத்திற்கும் அதிகமான நாடுகள் பல்தேசிய இன நாடுகளாய் அமைந்துள்ளனவென்பது முக்கியமானதாகும் ஒவ்வொரு தனிநாட்டிலும் உள்ளதேசிய இனம் ஒவ்வொன்றினதும் தனித்துவங்கள் காப்பாற்றப்பட்டு, உரிமைகள். யாவும் பாதுகாக்கப்பட்டாலே, இனங்களி னதும், நாட்டினதும் எதிர்காலம் சுபீட்சம் நிறைந்ததாய் அமைய முடியும். அத்தகைய சூழ் நிலையிலேயே, பல்தேசிய இன அரசொன்று நின்று நிலைப்பது சாத்தியமாகும். இத் தகைய நிலைப்பாடுகளின் பின்னணியில் ,பல்தேசிய இனங்களினதும் பண்புகளைப் பாது காத்துக் கொண்டு,ஒரு நாடாக வாழுகின்ற ஆட்சியமைந்த அரசியல் முறைமையானது, கடந்த கால வரலாற்றில் வெற்றி கண்டும் வந்துள்ளது. மாறாகப் பல நாடுகளில் இத் தகைய ஒற்றுமைப் போக்கிற்கு முரண்பட்ட தன்மைகள் தென்படுவதனையும் கண்டு கொள்ள முடிகிறது. இந்நாடுகளில் தேசிய இனங்கள் பல, தமக்குள்ளேயே பிளவு பட்டுக் கொண்டு ஒரு நாடாக வாழவியலாத தன்மையை அடைந்துவிடுகின்றன. மேலும் அவை பிரிந்து சென்று தனியரசொன்றை தாபிக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டு விடு கின்றன.

இத்தகைய முடிவொன்றிற்கான காரணங்களை ஆராயுமிடத்துப் பல உண்மைகள் உலக அரங்கில் வெளிக்கொணரப்படுகின்றன. பிரதானமாகப் பல்தேசிய இன அரசசொன் றில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மை இனமானது, ஏனைய சிறுபான்மையினங்களுக் கெதிரான தனது பேரினவாதவியல்பினை வெளிப்படுத்தி நிற்பதைக் காண இயலுகின்றது. சிறுபான்மை இனத்தவர்களின் நலன்களுக்கு எதிரான அடக்குமுறைகளிலும் ஒடுக்கு முறை களிலும் ஈடுபடுவதன் மூலம் பல்தேசிய இன அரசொன்றினது இலட்சியத்தையே சிதை வாக்கும் செயற்பாடுகளையும் அவதானிக்க முடிகிறது. இனம்,மதம், மொழி, பண் பாடு, பொருளாதாரம் போன்ற துறைகளில் பெரும்பான்மையினருக்குள்ள உரிமைகளும், நன்மைகளும் சிறுபான்மையோருக்கு மறுதலிக்கப்படும் துரதிஷ்டவசமான கருத்தோட்டங்களும் அமுலாக் கல் களும் நடநதேறுவதனையும் நாம் நோக்க முடிகிறது. இத் தகைய காரணி களூடு ஏற்படக் கூடிய மன உந்துதல்களைச் சிறுபான்மையினங்கள் பெரும்பான்மை யினத்துக் கெதிரான ஆர்ப் பாட்டங்களாகவும், எழுச்சிகளாகவும் ஆக்கு வதற்குத் தயாராகிவிடுகின்றன. தமது மறுக்கப் பட்ட உரிமைகளை வென்றெடுப்பதற் காக அவை போராட்டங்களிலீடுபடுகின்றன. அவர் களது போராட்டங்களை மழுங்கடிப் பதற்காகப் பேரின வாதம் பல வடிவங்கள் பூண்டு செயற்பட ஆரம்பிக் கிறது. 'தனது அதிகாரப்பலத்தை அழுத்தத்துடன் பிரயோகிக்கின்றது இப்படியாகத் தேசிய இனங்களுக் கிடையே முரண்பாடுகள் வளர ஆரம்பிக்கின்றன. இத் தகைய பிரச்சினை களையே நாம், தேசிய இனப்பிரச்சினைகள் எனக்கொள்கிறோம்.

## தேசியம்,தேசியவாதம், தேசிய இனம் பற்றிய கருத்துக்கள

பண்டைய நிலமானிய முறைகளுக்கெதிரான ஒடுக்கப்பட்ட மக்களது எழுச்சிகள், காலத்துக்குக் காலம் உலக வரலாற்றில் இடம்பெற்ற வண்ணமே இருந்துள்ளன. இருப் பினும் தேசியம் ,தேசியவாதம், தேசிய இனம் பற்றிய கோட்பாடுகளும், கருத்துக்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே அர்த்தம் நிறைந்த விளக்கம் தருவனவாய் அமைந் தனவெனலாம். கி.பி. 1789இல் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியானது, சுதந்திரம், விடுதலை சகோதரத்துவம் போன்ற எண்ணக் கருத்துக்களை வளர்த்தெடுத்தது. தன் தாய் நாடான பிரித்தானியாவுக்கெதிராகவே கிளர்ந்தெழுந்த அமெரிக்கப் புரட்சியும் கொடுங்கோன்மைக் கெதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் எழுச்சி கண்ட ரஷ்யப்புரட்சியும் கூட, அடக்குமுறையின் வீழ்ச்சியையும் மக்கள் சக்தியின் மகத்துவத்தையும் அவனிக்கு எடுத்துக் காட்டினவெனலாம். இதேபோன்றே அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்கள் பலவும் தேசியத்தின் தோற்று வாய்க்கு அத்திவாரமாயின.

(தொடரும்)

# வலம்புரி
## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுநர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில் பிரதேச செய்தியாளர்களை (பயிலுநர்கள்) நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த.(சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.
- பயிலுநர்கள் தரத்தில் 3 மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக்காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் ஆர்வமும் காணப்படுமிடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.
- பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- இலங்கையிலிருந்து வெளிவரும் வேறு பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியாது.
- ஏற்கனவே பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தர செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

தகுதியானவர்கள் முழுப் பெயர் ,நிரந்தர முகவரி, தபால் முகவரி, பால், பிறந்த தேதி, தே.அ.அ. இல; விவாக நிலை ,தொழில் புரியும் இடம் ,பதவி (இருப்பின் ) கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலா ளர் பிரிவு, பிரதேசசபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம்(இருப்பின்), கல்வித்தகைமை என்பவை உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண் ணப்பங்களை,

*பிரதம ஆசிரியர் வலம்புரி,*<br>*15 வெள்ளாந் தெரு,*<br>*வண்ணார் பண்ணை*<br>*யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு 31.05.2005 ஆம் தேதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அன்றேல் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

*-நிர்வாக உத்தியோகத்தர்.*

## பிரதேச செய்தியாளர் (பயிலுநர்) தெரிவுக்கான பிரதேசங்கள்

### வலிகாமம்
திருநெல்வேலி
நல்லூர்
கந்தர்மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தன்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
கொழும்புத்துறை
பாசையூர்
வண்ணார்பண்ணை
கொட்டடி
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
அச்செழு
புன்னாலைக்கட்டுவன்
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை

### வடமராட்சி
கரவெட்டி
கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானாறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரிமூலை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
கொற்றாவத்தை
பொலிகண்டி

### தென்மராட்சி
நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

### தீவகம்
நெடுந்தீவு
மண்டைதீவு
ஊர்காவற்றுறை
வேலணை
புங்குடுதீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்
நயினாதீவு

### வன்னி
கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவமடு

# தமிழகப் பயணம்

② டென்மார்க் அரசின் நிதி உதவியு டன் இதழியல் கற்கைநெறி மாணவர்கள் 13 பேர் தமிழகத்திற்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

• டென்மார்க் அரசின் பிரதிநிதி ஹென்றிக், ஊடகவளங்கள் பயிற்சி மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், இணைப்பாளர் கலாநிதி அருட்செல்வம் யுனஸ்கோ பிரதிநிதி திருமதி தஜா ஆகியோர் இந்தியப்பயண ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

ஏப்ரல் 22ஆம் திகதி இரவு 10 மணியளவில் 13 மாணவர்களும் தமிழகப் பயணத்திற்காக கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கூடினர். முன்னதாக விமானப் பயணச்சீட்டு ஒழுங்குகளை எம்.ஆர்.ரீ.சி. முகாமையாளர் சிவதாஸன் மேற்கொண்டிருந்தார்.

ஏப்ரல் 23ஆம் திகதி அதிகாலை 2.45 மணிக்கு சகாரா விமானத்தில் பயணம் தொடங்கியது. சரியாக ஒரு மணித்தியாலத்தில் விமானம் சென்னை விமான நிலையத்தில் தரையிறங்கியது.

யாழ்ப்பாணத்திலிருந்து விமானம் மூலம் கொழும்பு செல்வதற்கான பயண நேரமும் கொழும்பில் இருந்து சென்னை செல்வதற்கான பயண நேரமும் ஒத்திருந்தது. கொழும்பு-சென்னை தூரத்தின் குறுக்கத்தை நேரில் பார்த்தபோது 1983களில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியில் அநுரா பண்டார நாயக்கா பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையே ஞாபகத்திற்கு வந்தது.

அதாவது ஐக்கிய தேசியக்கட்சியின் அன்றைய ஆட்சிக்காலத்தில் ஈழத்தமிழர் கொல்லப்பட்டனர். அந்நடவடிக்கையை அன்றைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் கண்டித்திருந்தார். இந்தியாவின் அன்றைய கண்டனம் இலங்கை ஆட்சியாளர்களுக்கு குலப்பன் நடுக்கத்தைத் தந்திருந்தது.

இதுகுறித்து பாராளுமன்றத்தில் உரையாற்றிய அநுரா பண்டாரநாயக்கா இலங்கை அரசு தமிழர் விடயத்தில் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும். ஒரு சிகரெட்டைக் குடித்துவிட்டு மற்றைய சிகரெட்டை பற்றவைப்பதற்குள் இந்திய இராணுவம் இலங்கைக்குள் தரையிறங்கிவிடும் எனக் கூறியிருந்தார்.

அநுரா பண்டார நாயக்கா கூறியது இந்திய இராணுவ விடயத்திலும் அண்டையநாட்டின் கிட்டத்திலும் பொருத்தமாக இருப்பினும் தமிழர்களுக்காக... என்பது மட்டும்மாறிபோனமை சென்னை விமான நிலையத்தில் இறங்கி நின்ற நம் இதயங்களை இறுக்கிக்கொண்டது.

நம் சகோதர உறவுகளின் தாயகத்தில் நிற்கின்றோம் என்ற நினைப்பில் மன இறுக்கங்களை இணைத்துக் கொள்ள முயற்சித்தாலும் இந்தியப் பயணத்திற்காக வீசா பெறுவதில் பயிற்சிமைய முகாமை பட்ட கஷ்டங்கள் அதிலும் யாழ்ப்பாணத்தவர்கள் என்பதால் ஏற்பட்ட தடைகள் என்பன எம்மை அறியாமலே ஆழ்ந்த சிந்தனைக்குள் ஆழ்த்தியது.




## காத்திருந்த இணைப்பாளர்

சென்னை விமான நிலையத்தில் இணைப்பாளர் கலாநிதி அருட் செல்வம் அவர்கள் காத்திருந்து வரவேற்றார்.

## உலகப் பல்கலைக்கழக விடுதியில் தங்க மறுப்பு

அதிகாலை வேளை என்பதால் சென்னை விமான நிலையம் சுறு சுறுப்பை இழந்திருந்தாலும் விமானநிலைய முன்வளாகத்தில் தரித்து நின்ற ரைக்ஸி சாரதிகள் சுறு சுறுப்பாக இருந்தார்கள்.

வாங்க... வாங்க என்று தங்கள் உழைப்பின் நிமித்தம் எங்களை வரவேற் றார்கள். கூடவே பணப்பரிமாற்றத் தொழிலைச் செய்யும் நபர் ஒருவரும் இலங்கைப்பணத்திற்கு இந்திய நாணயத்தை மாற்றிக்கொடுக்கும் முயற்சியில் வேகமாக ஈடுபட்டிருந்தார்.

இணைப்பாளரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மூன்று ரைக்ஷிகளில் ஏறிக் கொண்டோம். ரைக்ஸி சென்னையில் உள்ள உலகப்பல்கலைக்கழக விடுதியை நோக்கிச் சென்றது.

உலகில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் தொடர்புடையவர்கள் தமிழகத்திற்கு வருகின்றபோது தங்குவதற்காக டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் கட்டப்பட்டதே இவ்விடுதியாகும். இவ்வீடுதி சென்னையில் பல்கலைக்கழகத்தின் ஆட்சி அதிகாரத்திற்குட்பட்டுள்ளது. உலக பல்கலைக்கழக விடுதியின் நுழை வாயிலில் ரைக்ஸி நிறுத்தப்படுகின்றது. பூட்டப்பட்டிருந்த கேற்றை தட்டுகின்றோம்.

இணைப்பாளர் வோச்மென்... வோச்மென் எனக் குரல் கொடுக்கின்றார்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வோச்மென் பத்துநிமிடங்கள் கடந்து கண்ணைக் கசக்கியவாறு திறப்புக் கோர்வையுடன் வந்து பூட்டைத் திறந்து விட்டார். இணைப்பாளரும்நானுமாக உள்ளே சென்று விடயத்தைக் கூறினோம். கேற்றைத் திறந்துவிட்ட வோச்மென் இன்னொரு வேச்மெனை எழுப்பிவந்தார்.

அவரிடமும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த செய்தியைத் தெரிவித்து இங்கு த்தங்கப் போகின்றோம் எனக் கூறினோம். விடுதி நிர்வாகம் அப்படி ஏதும் தன்னிடம் கூறவில்லையெனத் தெரிவித்தார். இவ்விடத்தில் இணைப்பாளர் குறுக்கிட்டு 'நான் ஏற்கனவே நிர்வாகத்துடன் கதைத்திருக்கின்றேன் இவர்கள் யாழ்ப்பணத்துப் பல்கலைக் கழக மாணவர்கள் இவர்களை இங்குதான்தங்க வைக்க வேண்டும்' என வாதாடினார்.

இருந்தும் வோச்மென் தனது பிடியைத் தளர்த்துவதாக இல்லை. இணைப்பாளருக்கு கோபம் வந்துவிட்டது. உலகப் பல்கலைக்கழக விடுதி அமைக்கப்பட்டதன் நோக்கமே தெரியாமல் இருக்கின்றது எனக்கடிந்து கொண்டு ரைக்ஸியில் ஏறினார். தொடர்ந்து நானும் ஏறிக் கொண்டேன்.

அதிகாலை வேளை இரவு முழுவதும் நித்திரை முழிப்பு. விடுதியில் உறங்கலாம் என்றால் உறங்கி விழித்த வோச்மென் விடுவதாக இல்லை. இணைப்பாளரின் கட்டளைப்படி ரைக்ஸி வந்த வீதியால் வேகம் எடுக்கின்றது.

வோச்மென் அனுமதி தராததனால் கோபமுற்றிருந்த இணைப்பாளரிடம் மெல்லக் குரல் கொடுத்தேன். இனி... "லொயலாக் கொலிச் (Loyola College) கொஸ்ரலுக்குப் போவோம்" என்றார்.

# சென்னை விமான நிலையத்தில் கீதா உபதேசக் காட்சி

அதிகாலை 3.45 மணியளவில் இறங்கிய நாம் குடிவரவுப் பதிவுகளை சென்னை விமான நிலைய அதிகாரிகளிடம் செய்து கொண்டோம்.

**பயணக் கட்டுரை**

பிரம்மாண்டமான-நவீன வசதிகள் முழுமைபெறாத சென்னை விமான நிலையத்தின் உள் மண்டபத்தில் குருஷேத்திரத்தில் கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்கு கீதா உபதேசம் செய்யும் காட்சி சித்தரிக்கப்பட்டிருந்தது.

அந்தக்காட்சியைக் கண்டதும் எனக்குள் ஓர் ஆறுதல். உலகம் முழுவதற்கும் உகந்த உபதேசம் தந்த இந்து மத சிறப்புகளுக்கு இடமில்லாது போய் விடுமோ என்ற என் உள்ளார்ந்த அச்சத்தை உடைத்தெறிவது போல், சென்னை விமான நிலையத்திலிருந்த கீதா உபதேசக் காட்சி இருந்தது.

சென்னை விமான நிலையத்தின் நுழைவாயிலை அதிகாலை 4.30 மணிக்கு அடைந்த போது இரண்டு தினங்களுக்கு முன்னதாக சென்னை சென்றிருந்த எமது

**என்.விஜயன்**

லொயலாக்கொலிச் எங்கே இருக்கின்றது என்ற கேள்வியை நான் அப்போது எழுப்பவில்லை. ஏனெனில் கொஸ்ரல் எங்கேஇருக்கின்றது என்ற கேள்வி எனக்கு தேவையற்றதாக இருந்தது.

அதிகாலை 5.30 மணியளவில் ரைக்ஸி லொயலாக்கொலிச் கொஸ்ரலில் நிறுத்தப்பட்டது. நான்கு அறைகளில் மூவர் வீதம் தங்கினோம். எங்களுடன் வந்திருந்த மாணவி ராகினி சென்னை விமான நிலையத்தில் இருந்தே தனது உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தார்.

(வளரும்)

# ஆசிரியர் சேவை தரம்-I; போட்டிப் பரீட்சை ரத்து!

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சேவை தரம் ஒன்றிற்கு செல்வதற்கான போட்டிப் பரீட்சை நடைபெறமாட்டாது.

அதற்கான கடிதம் பொதுச்சேவை ஆணைக்குழுவிடமிருந்து கல்வியமைச்சிற்கு அனுப்பப்பட்டிருப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

45 வயதைத் தாண்டிய ஆயிரக்கணக்கானோரின் மனங்களைச் சஞ்சலப்படுத்திய மேற்படி போட்டிப் பரீட்சைக்கு தற்போது தீர்வு கிடைத்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை தரம் 2-1 இல் ஐந்து புள்ளிகளைப் பெற்றுள்ள ஆசிரியர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றவேண்டுமென கல்வியமைச்சு விண்ணப்பத்தைக் கோரியிருந்தது.

இது தொழிற்சங்கங்களுடன் அமைச்சு மேற்கொண்டிருந்த உடன்படிக்கைக்கு முரணானது என்றும் இப் பரீட்சை ரத்துச்செய்யப்படவேண்டுமென்றும் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் பொதுச்சேவை ஆணைக்குழுவைக் கேட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.(க-9)

## நீர் வீழ்ச்சியை படம் பிடிக்கச்சென்றவர் பலி

(கொழும்பு))

பொகவந்தலாவை நீர் வீழ்ச்சியினை படம்பிடிக்கச்சென்ற இளைஞனொருவன் தவறிவீழ்ந்து பரிதாப மரணமடைந்தார். பொகவந்தலாவை லட்சுமி தோட்ட பணியகப் பிரிவிலுள்ள மின் உற்பத்தி நிலையத்திற்கருகாமையிலுள்ள நீர் வீழ்ச்சியை படம் எடுக்கும்போதே இவர் பலியானார்.

பலியானவர் பசறையைச்சேர்ந்த வேலாயுதம்பிள்ளை சதீஸ்குமார (வயது -23) என்பவராவார். இவர் வெஞ்சர் தேயிலை நிறுவனத்தில் கணனி பயிற்றுவிப்பாளராகப் பணியாற்றுகின்றவராவார். (க-9)

# திருமலையில் மற்றொரு புத்தர்சிலை அமைக்கும் முயற்சி முறியடிப்பு!

(திருகோணமலை)

ஆங்காங்கே புத்தர் சிலைகள் திடீர் திடீரென முளைப்பதால் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் திருகோணமலை நகரப்பகுதியில் மற்றொரு புத்தர் சிலையை திடீரென வீதி ஓரத்தில் ஸ்தாபிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டதெனத் தெரியவருகின்றது.

திருகோணமலை பஸ்நிலையப் பகுதியில் திடீரென முளைத்த புத்தர் சிலை விவகாரம் சூடுபிடித்திருக்க நேற்று முன்தினம் என்.ஸி.வீதியில் (எகாம்பரம் வீதியில்), திருகோணமலை மயானம் மற்றும் ஜாமாலியா ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட திருக்கடலூர் பிரதேசத்தில் உள்ள விஜிதபுர என்ற இடத்தில் வீதியோரத்தில் புத்தர் சிலை ஸ்தாபிக்க முயற்சி எடுக்கப்பட்டது.

புத்தர்சிலையை நிறுவுவதற்கான பீடம் கட்டப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கிடைத்த செய்தியை அடுத்து அங்கு நேற்று முன்தினம் முற்பகல் விரைந்த பொலீஸார் அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தினர்.

பீடம் அமைக்கத் தயாரான பகுதியும், அதற்காகக் குழைத்த சிமெந்தும் அங்கு தற்போது காணப்படுகின்றன.

மேலும் அப்பகுதியில் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் நிறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையில் திருமலை-கண்டி வீதியில் 98ஆம் கட்டையில் அமைக்கப்பட்ட பாரிய புத்தர் சிலைக்கான வேலைகள் முடிவுற்று நேற்று முன்தினம் முற்பகல் 9.30 மணிக்கு அது திறந்து வைக்கப்பட்டது.

வெசாக் மத அனுட்டானங்களை ஒட்டிய சந்தடிசாக்கில் திருகோணமலையில் பரவலாகப் பல இடங்களில் புத்தர் சிலைகளை அமைத்து பேரினவாத ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் முயற்சிகள் எடுக்கப்படுவதாக தமிழர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

(க)

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல:09 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

வினாத்தாள் - I நேரம்: 45. நிமிடங்கள்

❖ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.

❖ தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

◆ பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(01) இடைவெளியில் அமையப் பொருத்தமான உரு.





1) 2) 3) 4)

(02) விடப்பட்ட இடத்திற்குப் பொருந்தக்கூடிய உரு.



1) 2) 3) 4)

(03) அருகே உள்ள தராசிலுள்ள கோளம் ஒன்றின் நிறை.




1) **1600g** 2) **400g**
3) **200g** 4) **100g**

(04) தரப்பட்டுள்ள எண் வடிவங்களில் முக்கோணியுள் அடங்கும் எண்களின் மொத்தப் பெறுமதி.




1) 120 2) 18
3) 27 4) 23

(05) கீழே உள்ள வடிவங்களில் ஒன்று வித்தியாசமானது. அதன் கீழ்க் கோடிடுக.



1) 2) 3) 4)

◆ 06-10 வரையான வினாக்களுக்குச் சரியான விடைக்குரிய இலக்கத்தை அருகே உள்ள கூட்டினுள் எழுதுக.

(06) 40+A = 60 எனில் A க்கு வழங்கக்கூடிய பெறுமானம்.
1) 10 2) 25 3) 20

(07) கட்டிப்பாற்பேணி எதற்கு உதாரணமாகலாம்
1) கனவுரு 2) சதுரமுகி 3) உருளை

(08) கீழே உள்ள பொருட்களில் ஓரிடத்தில் வைக்கும்போது பாய்ந்து செல்லும் இயல்பு கொண்டது.
1) மரக்குற்றி 2) நீர் 3) பந்து

(09) துவிச்சக்கரவண்டி (Bicycle)யில் மின்னைப் பெற்றுக்கொள்வதற்குப் பொருத்தப்பட்டுள்ள உபகரணம்.
1) டைனமோ 2) மணி 3) மின்குமிழ்

(10) வித்தியாசமான எண் கூட்டம் எது?
1) 1 2 3 4 7 6 2) 3 4 2 1 6 7 3) 2 4 3 1 5 6

◆ 11 - 15 வரையான வினாக்களுக்கு மிகவும சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

(11)




இம் மணிக்கூடு 15 நிமிடம் பிந்தி ஓடுகின்றது. எனவே இப்போதைய சரியான நேரத்தை எழுதுக.

------------------------------------------

(12) 6 முதல் 9 வரையிலான எண்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணையும் மிகச்சிறிய எண்ணையும் எழுதுக.

1) மிகப்பெரிய எண் ------------------- 2) மிகச் சிறிய எண் ------------

(13) SS என்பதால் 66உம், RR என்பதால் 33 உம் குறிக்கப்படின் SR என்பதால குறிக்கப்படும் எண்ணை எழுதுக.

------------------------------------------

(14) ஆடு என்னும் பிராணியின் ஆண்பாற்பெயர் கடா ஆகும். இதன் பெண்பாற் பெயரை எழுதுக.

------------------------------------------

(15) பிந்து, நந்து ஆகிய இருவரும் சுந்துவின் பிள்ளைகள். ஆனால் பிந்து, சுந்துவின் மகனல்ல. பிந்து, சுந்துவிற்கு என்ன முறை என எழுதுக.

------------------------------------------

◆ 6-20 வரையான வினாக்களில் தரப்பட்ட நான்கு சொற்களுள் இரண்டு ஒரே கருத்துடையவை. அச்சொற்கள் இரண்டின் கீழேயும் கோடிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| (16) | (1) கவலை | (2) இன்பம் | (3) துக்கம் | (4) அழுகை |
| (17) | (1) நட்சத்திரம் | (2) அம்புலி | (3) சூரியன் | (4) சந்திரன் |
| (18) | (1) இறைவன் | (2) இந்திரன் | (3) குபேரன் | (4) வெளிச்சம் |
| (19) | (1) ஆரம்பம் | (2) முடிவு | (3) தொடக்கம் | (4) இடைநிலை |
| (20) | (1) மரம் | (2) விழுது | (3) விருடசம் | (4) வேர் |

◆ 21-25 வரையான வினாக்களில் நீர் பாடசாலை செல்லமுன்பு உம்மால் செய்யப்படும் கருமங்கள் சில தரப்படுகின்றன. இக்கருமங்கள் அக் குறித்த காலப்பகுதிக்கு உரியவை எனின் (A) எனவும் அவ்வாறு இலலை எனின் (B) எனவும் எதிரே உள்ள கூட்டினுள் எழுதுக.

(21) படிப்பதற்குரிய புத்தகங்கள், அப்பியாசக்கொப்பிகள், பென்சில்கள், உபகரணங்கள் மதிய உணவு என்பவற்றை எடுத்துவைத்தல்.

(22) கதிரையில் அமர்ந்து கற்பதற்கு ஆயத்தமாதல்.

(23) காலை ஆராதனையில் ஈடுபடுதல்.

(24) காலை உணவினை உண்டு அப்பா, அம்மாவிடமிருந்து விடைபெறுதல்.

(25) பாடசாலைக்குச் சீருடை, பாதணி என்பவற்றை அணிதல்.

◆ 26-30 வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுடன் தொடர்புடைய சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

(26) மாமிச் உணவை மட்டும் உண்பவை மாமிச உண்ணிகள் எனப்படும். புலி இறைச்சியினை உண்ணுகின்றது. ஆகவே புலி ஒரு
1) தாவர உண்ணி 2) மாமிச உண்ணி 3) தாவர, மாமிச உண்ணி

(27) பேருந்து ஒன்றில் இருந்த பிரயாணிகளில் அதிகமானோர் பெண்களாவா. ஆகவே பேருந்தில்
1) ஆண்கள் இல்லை
2) பெண்கள் மட்டும் உள்ளனர்
3) குறைந்தளவு ஆண்கள் உள்ளனர்.

(28) பிரியங்கா சென்ற தடவை பரீட்சையில் 190 புள்ளிகளைப் பெற்று, முதலாவதாக வந்தாள். இம்முறை
1) முதலாவதாக வருவாள் 2) கடைசியாக வருவாள் 3) கூறமுடியாது.

(29) சுந்தரி கைகாட்டியிருந்தால் வாகனம் நின்றிருக்கும். ஆகவே வாகனம்,
1) நிற்கவில்லை 2) நின்றது 3) ஓடி, ஓடி நின்றது

(30) மழை பெய்தால் வெள்ளம் வரும். வெள்ளம் வந்தால் எங்கள் வீட்டுக் கிணறு நீரால் நிறையும். ஆனால் கிணற்றுள் நீர் மிகவும் குறைந்தளவே உண்டு. ஆகவே,
1) மழை பெய்யவில்லை
2) நீர் கிணற்றுக்குள் செல்லவில்லை
3) மழை கடுமையாகப் பெய்தது

◆ கோலத்தை விளங்கி வெற்றிடத்தை நிரப்புக.

(31)




(32)




◆ சரியான விடைக்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

(33)



இதனை உள்ளெடுத்தால்
1) உடல் ஆரோக்கியமாக இருக்கும்
2) சுவாசநோய், இதயநோய் வரலாம்
3) ஏனையோரிடம் நன்மதிப்புப் பெறலாம்.

(34)



இந்த வகை விலங்குகள்
1) வீடுகளில் மட்டும் வளர்க்கப்படுகின்றன
2) தாவர உணவுகை மட்டும் உண்ணும்
3) சிறு பூச்சிகளையும் தாவர உணவுகளையும் உண்ணும்

◆ கீழே தரப்பட்டுள்ள எண்களை அவதானித்து விடை எழுதுக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 5 | 8 | 9 | 11 | 13 | 14 | 16 | 18 | 25 |

(35) இவற்றுள் ஒற்றுமை என்ன?
[---------------------]

(36) எந்த இரு எண்களைப் பெருக்கும்போது விடை 44 ஆகும்.
[---------------------]

(37) ஒழுங்காக எழுதும்போது அடுத்தடுத்து அமையும் எண்கள் இரண்டு உண்டு. அவற்றை எழுதுக.
[---------------------]

(38) இங்குள்ள எண்களில் 3ஆல் வகுபடத்தக்க எண்களை எழுதுக.
[---------------------]

◆ கீழ்வருவனவற்றுள் வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.

(39)



1) 2) 3) 4) 5)

(40)



1) 2) 3) 4) 5)

# நாட்டில் சமாதானமும் பொருளாதாரமும் அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கிறது!

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய நிலவரங்களின காரணமாக நாட்டில் சமாதானமும் பொருளாதாரமும் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகயுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் மக்களை சிரமங்களுக்கு உட்படுத்தாது ஜனாதிபதி உடனடியாக அரசியல் தீர்மானமொன்றை எடுக்கவேண்டுமென்று ஐக்கிய தேசியக்கட்சியின பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை உரிய காலப்பகுதியில் நடத்தவேண்டும் என்பதே நாட்டின் பெரும்பாலான மக்களின் கோரிக்கை என்று திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

முன்னைய அரசாங்கத்துடன் ஒபபிடும் போது கூட்டமைப்பு அரசாங்கத்தின் கீழ் தேசிய பாதுகாபபும், சமாதானமும், பொருளாதாரமும பாரிய அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் சுட்டிக்காட்டினார். (க-9,4)

# இலங்கை முதலீட்டுச் சபையின் காரியாலயம் புதுடில்லியில் திறப்பு

(கொழும்பு)

இந்தியாவுடன் முதலீடுகள் சேவைகள் சார்ந்த முழுமையான உடன்படிக்கையில் கைச்சாத்திட இலங்கை அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று முதலீட்டுச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் இம்மாத முற்பகுதியில் கொழும்பில் நடந்ததாகவும் அவை வெற்றிகரமாக அமைந்திருந்ததாகவும் சபையின் தலைவர் சாலிய விக்ரமசூரிய கூறியிருககிறார்.

இலங்கை முதலட்டுச் சபையின் முதலாவது வெளிநாட்டுக் காரியாலயத்தை புதுடில்லியில் அங்குரார்ப்பணம் செய்துவைத்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இந்தியாவுடனான சர்வாம்ச பங்காளித்துவ உடனபடிக்கையை இவ்வாண்டு முடிவடைவதற்குள் கைச்சாத்திட இருப்பதாக முதலீட்டுச் சபையின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-2)

# உழவு இயந்திரங்களில் பயணம் செய்யத் தடை

(கொழும்பு)

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் உழவு இயந்திரங்களில் பாதுகாப்பு அற்ற வகையில் பொது மக்கள் பயணம் செய்வதற்கு தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

விபத்துக்கள் இடம்பெறுவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டே இத்தகைய நடவடிக்கை எடுக்கபபட்டுள்ளதாக பொலிஸ் தமையகத்தின் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி காமினி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சகல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கவனயனமாகவும, மதுபோதையில் வாகனங்களை செலுத்துவோரையும் கைதுசெய்ய திடீர் சோதனைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுககபபடடுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவிக்கின்றது. (க-9)

# மக்களுடன் தொடர்பு கொள்ளாது திட்டங்களை தயாரிக்கக்கூடாது

(யாழ்ப்பாணம்)

பயனாளிகளினதும் பங்காளிகளினதும் உறவுகள் மேம்படும்போது தான் செயல் திட்டங்கள் வெற்றி பெற்று அதன்மூலம் பயனாளிகளின் தேவைகளும் பிரச்சினைகளும் பூர்த்தியடைகின்ற நிலை உருவாகும்.

இவ்வாறு இலங்கைக்கான சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் பங்காளிகள் அபிவிருத்தித் திட்டப்பணிப்பாளர் க.மகேந்திரன், சரசாலை தெற்கு ஸ்ரீ சரஸ்வதி வித்தியாலயததில் இடம்பெற்ற செயல் திட்டம் அமுலாக்கல் குறித்து கிராம நலன்விரும்பிகளுடனான கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

திட்ட இணைப்பாளர் வடிவேல் சிவாகரன் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இக்கூட்டத்தின் போது 50க்கு மேற்பட்ட பயனாளிகள் பங்கு கொண்டிருந்தனர்.

பங்காளிகள் அபிவிருத்தித் திட்டப்பணிப்பாளர் மகேந்திரன் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

கிராமங்களின் அபிவிருத்தியை மையமாகக் கொண்டு தயாரிக்கபபடுகின்ற திட்ட வரைவுகளில் மக்களின் உண்மையான தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து சரியான தகவல்கள் இடம்பெறல் வேண்டும். மக்களுடன் தொடர்பு கொள்ளாமல் கற்பனையில் திட்டங்களைத் தயார் செய்யக்கூடாது.

இந்த வகையில் தயாரிக்கபபடும் செயல் திட்டங்கள் கீழ்மட்டத்தில் இருந்தே மேல் நோக்கியதாக இருத்தல் வேண்டும்.

மேல் மட்டத்தில் இருந்து தயாரிக்கப்படும் செயல்திட்டங்கள் குறித்த இலக்குகளை அடைய வழிவகை செய்யமாட்டாது..

இந்தவகையில் சரசாலை தெற்கு கிராமத்தில் மேற்கொள்ளப்படும் சமூக பொருளாதார ஆய்வின் மூலம் பல செயல்திட்டங்கள் உருவாக வழிபிறக்கும் என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கிராமிய மட்டப் பெண்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறியிருந்தனர். (க-16)

# கபடிப் போட்டி

(பொன்னாலை)

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளில் நடத்தப்பட்டுவரும் போட்டிகளில் ஆண், பெண்களுக்கான கபடிப் போட்டியில் நெடுந்தீவுக்கான போட்டி எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் நெடுந்தீவில் பி.ப 2.00 மணியளவில் நடைபெறவுள்ளது. (க-49)

# பட்டப் பின் கல்வி டிப்ளோமாவிற்கான விண்ணப்பத் திகதி ஜூன் 15 வரை நீடிப்பு

(கொழும்பு)

தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் பட்டப் பன் கல்வி டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பத் திகதி எதிர்வரும் ஜூன மாதம் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடல்கோள் அனர்த்தத்தினால் இப்பாடநெறிக்கு பலர் விண்ணப்பிக்கத் தவறிவிட்டனர்.

இதன்காரணமாகவே இப்பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

2005, 2006 ஆம் கல்வியாண்டுக்கான பட்டப் பின் கல்வி டிப்ளோமாப் பாடநெறிக்கான முடிவுத திகதியாக மார்ச் மாதம் 28ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் கடல்கோள் அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மற்றும் இடம்பெயர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்கவுமில்லை.

அத்துடன் இப்பாடநெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டது பற்றி பலர் அறிந்திருக்கவுமில்லை.

இந்நிலையிலேயே பட்டப பின் கல்வி டிப்ளோமா பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணபபப்படிவங்களை பெறுவதற்கு இலங்கை வங்கியில் பணிப பாளர் நாயகம், தேசியக் கல்வி நிறுவகத்திற்கு, 200 ரூபா செலுத்திய பற்றுச்சீட்டை ‘செயல்திட்ட தலைவர், பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பாடநெறி, ஆசிரியர் வலுவூட்டல் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம’ என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கபபடவேணடும். (க-9,2)

# இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதோர் ஜூலை – 1 முதல் வாக்காளராகப் பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் 2004ஆம் ஆண்டிற்காக வாக்காளரை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதால் ஜூலை முதலாம் திகதி முதல் வாக்காளர்கள் தமது பெயர்களைப் பார்வையிடலாம் எனத் தேர்தல் திணைக்களத்தின் யாழ். மாவடட அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டுக்கான வாக்காளர்களை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் ஜூன் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. இதனால் ஜூலை முதலாம் திகதியில் இருந்து வாக்காளர்கள் தேர்தல் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் அல்லது பிரதேச செயலகங்கள் அல்லது தபால கந்தோர் ஆகியவற்றில் தமது பெயர்களைப் பார்வையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அப் பெயர்களில் தவறுகள் ஏதும் ஏற்பட்டிருந்தால் அவற்றை திருததிக்கொள்ள முடியுமஎனவும் 18 வயதிற்கு மேற்பட்ட, இலங்கையில் வேறெந்த பகுதிகளிலேனும் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படாதவர்களும் வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-19)

# சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிராக நீதிமன்றில் வழக்கு

இலங்கை மற்றும் தமிழ் நாட்டுக் கடற்பரப்பல இந்திய கூடடரசு மேற்கொள்ள உள்ள சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்த்து இந்தியத் தன்னார்வ நிறுவனம் தமிழ்நாட்டுத் தலைமை நீதிமனறத்தில் வழக்குத் தொடர திட்டமிட்டுள்ளது.

சுற்றுச் சூழலைப் பாதிக்கும் இத்திட்டத்திறகு தடைவிதிக்கக் கோரி சென்னையை மையமாகக் கொண்டு இயங்கும் தன்னார்வ அமைப்பான ‘கடலோர நடவடிக்கைகளுக்கான அமைப்பு’ இந்த வழக்கைத் தொடரவுள்ளது.

கடந்த 19ஆம் திகதியன்று இந்தியக் கூட்டரசு சேது சமுத்திரத் திட்டத்திறகு ஒப்புதல் அளித்தது. பல ஆண்டாக பாசீலிக்கப்படடு வந்த இந்தத்திட்டம் தற்போதைய இந்தியக கூட்டரசால் நடைமுறைப் படுததப்படவுள்ளது.

சேது சமுத்திரத் திட்டததை எதிர்ப்பது ஏன் என்று இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த தன்னார்வ அமைப்பின் நிர்வாகி ஆசி பெர்னாண்டஸ், கடல் உயிரிச் சூழலை மிகக் கடுமையாக இது பாதிக்கும். மன்னார் மறறும பாக்குநீரிணையில் உள்ள பவளப் பாறைகள் இத்திட்டத்தால அழிநதுவிடும் என்று கூறினார். (ற)

# புதிய இராணுவ தளபதி நியமனம்

மட்டக்களப்பிற்கான இராணுவத தளபதியாக பிரிகேடியர் லியோனோர்ட் மார்க் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு முன்பு பிரிகேடியர் லக்சிறி அமரதுங்கவே இப் பொறுப்பை வகித்தார். (க)

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

### வினாத்தாள் இல:07

கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 01.த.சூரியபிரியா | யா/சென்மேரிஸ் வித்தியாலயம். |
| 02.பு.பிருந்தாபன் | யா/வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி. |
| 03.செ.துவாரகா | யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம். |
| 04.த.சானுஜன் | யா/தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம். |
| 05.கு.ஜெனோலின் | யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி |
| 06.செ.சுலக்சன் | யா/மானிப்பாய விவேகானந்த வித்தியாலயம். |
| 07.செ.நிஷானி | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 08.செ.லோசியன் | யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம். |
| 09.பி.சகானா ஜறின் | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 10.அ.றொஷாணி | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 11.ஸ்ரீ.ஸ்நேகா | யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றே.க.த.க. பாடசாலை. |
| 12.ஜெ.மதுசனா | யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம். |
| 13.தி.றதீபா | யா/வட்டு கார்த்திகேய வித்தியாலயம். |
| 14.கு.ஸ்ரிபின்சன் அலெக்ஸ் | யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. |
| 15.ச.அபிராமி | யா/வட்டு கார்த்திகேய வித்தியாலயம். |
| 16.ர.கிங்ஸ்ரன் | யா/புனித பத்திரிசியார் கல்லூரி. |
| 17.கு.சரண்யா | யா/ஞானசாரியார் கல்லூரி. |
| 18.ச.நிருசிகா | யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. |
| 19.வி.சிந்துஜன் | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 20.சு.லக்ஷனா | யா/இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை. |
| 21.கு.சுரேன் | யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம். |
| 22.க.கீதா | யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம். |
| 23.தி.திவ்வியா | யா/ஞானசாரியார் கல்லூரி. |
| 24.ப.கலாபன் | யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம். |

### வினாத்தாள் 07 இன் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01.(2) | 02.(1) | 03.(3) | 04.(2) | 05.(2) |
| 06.(4) | 07.(1) | 08.(2) | 09.(3) | 10.(3) |
| 11. உரு III | 12. 1 | 13. 30 | 14. 11 | 15. 14 |
| 16.(4) | 17.(1) | 18.(2) | 19.(3) | 20.(4) |
| 21.(2) | 22.(1) | 23.(3) | 24.(1) | 25.(2) |
| 26.(1) | 27.(1) | 28.(2) | 29.(3) | 30.(1) |
| 31. தமக்கை/அக்கா | 32. ஒலிம்பிக் தீபம் ஏற்றல் | | | |
| 33. முற்பகல | 34. அடையாள அட்டை | 35. தொலைபேசி சேவை | | |
| 36. சுனாமி | 37.(1) | 38.(2) | 39.(3) | 40.(1) |

### 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 09

மாணவர் முழுப்பெயர் : ..........................

பாடசாலையின் பெயர் : ..........................

வீட்டின் முகவரி : ..........................

மாணவர்களே! உங்கள் விடைகளை 31.05.2005 இற்கு முன் அனுப்பிவைக்கவும. உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன் கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான வ'டைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வனா இலக்கங்களை சரியாகக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினைவுப் பேருரை

**16.5.2005 ஆம் திகதி யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வின் போது பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினைவுப் பேருரையில் 'விடுதலைக்கான கல்வியில் ஆசிரியர், மாணவர் உறவின் பெறுமானங்கள், கல்வியியல் தத்துவார்த்த வரலாற்று நோக்கு' என்ற தலைப்பில் வலிகாம வலய வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (மாணவர் அபிவிருததி) குமாரசாமி சண்முகநாதன் BED. M.A (Education) நிகழ்த்திய பேருரையின் தொகுப்பு.**

என் இதயக் குமுறல்களை இந்தப் பூமி யில் நின்று சொல்லும் பாக்கியமும், உரிமை யும் எனக்குண்டு. நான் அவரது அத்தியந்த சடன். அவர் தந்த நல்லவை உண்டு, அதர் மத்தின் சக்திகளுக்கு நஞ்சுண்ட கண்டனாக காட்சி தருகிறேன். எனது மனச்சாட்சி திருப்தி யடைகிறது. ஒரு நல்லாசான் சந்திர சேகரத் தின் ஆசிரியக் கனவுகளைச் சுமந்து சத்திய சோதனைகளினூடே ஆத்ம திருப்தி தரும் வெற்றிகளையும் காண்கிறேன். தனது அந்த ரங்கங்களை, தனது இலட்சியங்களைத் தொலைக்க வந்த பந்த பாசங்களை என்னிடம மனந்திறந்து காட்டிய ஒரு ஆத்மா. தாகூரை யும, காந்தியையும், இயேசுக் கிறிஸ்துவை யும் உயிர்ப்பித்து சோக்கிர தீஸத்தை வெண் கட்டிகளாக்கி கரும்பலகைகளில் பதிக்க வைத்தவர். நல்லவர்கள நினைப்பது எவ் வாறேனும் நடந்தே தீரும் என்பதற்கு பல சாட்சிகள் உண்டு. அது எனக்கே வெளிச்சம்.

சில் நடைபெற்ற மகாநாடு உலக வங்கி, யுனெஸ்கோ, கல்வித் திட்டமிடலுக்கான சர்வ தேச நிறுவனம் என்பவற்றால் ஒழுங்குபடுத் தப்பட்டிருந்தது. இங்கு கலந்துரையாடப் பட்ட புனரமைப்பு அம்சங்களில் ஆசிரியர் பற்றிய அம்சம் முக்கிய இடத்தைப் பெற்றது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம், 'ஆசிரியர் அன்புடனும், பண்புடனும், பணியாற்றுதல்' என்பதாகும். இதுவே ஆசிரியர் மாணவருற வின் உயிர்ப்பான அம்சமாகும்.

நாம் எதிர்நோக்கும் கல்விப் பின்னடை வற்கு ஆசிரிய மாணவருறவு சீராக இல்லாமை ஒரு வலுவான காரணமாகக கொள்ளமுடி யுமா? என்பது கருத்திற் கொள்ளப்படவேண டும். ஆசிரியர்கள் இன்றைய கல்வி முறை யில் தமது வகிபாகத்தை உணர்ந்து ஈடு பாட்டுடன் செயற்படுவதைத் தடைசெய்யும் அல்லது ஊக்கமிழக்கச் செய்யும் அரசியல தலையீடு, ஊக்குவிப்புக்கள் இன்மை என் னும் காரணிகள் அவர்களது வினைத்



கொள்கின்றன. ஏனெனில் அந்நாட்டு மக் கள் அரசியல் சித்தாந்தத்தில் கால்பதித்து பற்றுறுதியுடன் வாழ பாடசாலைகளைப் பயிற்சிக்களங்களாக மாற்றும் திறமை ஆசிரியர்களிடத்தே கையளிக்கப்படுகிறது.

ஒரு சமூகமோ அல்லது இனமோ அல் லது நாடோ தனது மக்களைக் கருத்துணர் வான நிலை மாற்றம் **(transformation)** பெற வேண்டும் என்று உணர்கின்ற காலங் களில அதற்கான தேசிய மற்றும் உள்ளூர் வளங்களையும் நிறுவனங்களையும் பயன்

# விடுதலைக்கான கல்வியில் ஆசிரிய மாணவர் உறவின்

பேராசிரியர் ப.சந்திசேகரம் அவர்களைப பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது 19ஆவது வயதில் சந்தித்தேன். அச்சந்திப்பு அதிஷ்டமோ? துரதிஷ்டமோ அறியேன் அந் தப் பொல்லாத வயதில் அவரை நான் சந்தித் திருக்கக் கூடாது! கல்வித் தத்துவம் போதிகக வெண்ணீறணி உடையில் தோன்றினார். கருத் துக்கள் ஒவ்வொன்றும மின் அதிர்வுகள். ஆளுமையை ஊடறுத்து உள்நுழையும் சக்திவாய்ந்தவை. தமிழ் உணர்வு, தாய் நாட்டுப்பற்று, ஆத்மலயம், சர்வமத சம் மதம் சத்-சித்-ஆனந்தம், சத்தியம், சிவம், சுந்தரம் எனக் கருத்துக் கடலைக் கொட் டினார். கருத்துக்கள் காந்தக் கதிர்கள் ஆக ஊடறுத்தன. விளைவு?

ஏற்கனவே எனனுள் துளிர்விட்ட சத்தி யம் விஸ்வரூபம் கொண்டது. ஆசிரியரானேன. ஆசிரியராக வாழ்ந்தேன். ஆசிரியத்துவத் தால்ஒரு புதிய உலகைப் படைக்கலாம் என்று முட்டாள்தனமாக எண்ணிக்கொண்டேன் நான் சநதித்த வகுப்பறை, கருத்தரங்கு, கல்விக் களம், தெருக்கள், திண்ணைகள், சாலை

உண்மைக்காக, உணர்வுகளுடன் வாழ்ந்த எமது ஆத்ம குரு கருத்துக்களாக எம்முடன் வாழ்ந்து கருதியதை சாதிக்க எனது உரை யைத் தொடருகிறேன்.

"உள்ளத்து நேர்மை, உலக உடன்பாட டிற்காகத் தியாகம் செய்யப்படககூடாது. இதுவே தலைசிறந்த ஒழுக்கம். இந்த ஒழுக்கத்தையே கல்வி வளர்த்தல் வேண்டும்"

-பிளேட்டோ

"அடிமைத் தளையிலிருந்து விடுபடுவதே உண்மையான சுதந்திரமாகும். சுதந்திரம் என்னும் நுழைவாயிலைத் திறக்கும் திறவுகோல்

திறனைத தொடர்ந்து குறைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

போர் நிறுத்தக் காலத்தில் வாழும் வேளை மீண்டும் போர் மூளுமா? என்ற கேள்விக்கு முன்பாக விடுதலைக்கான கல்வி பற்றிய சிந்தனையை வலுப்படுத்தவேண்டியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் மார்ட்டின் பியூமா என்ற தததுவ ஞானியின் கருத்தை முன்வைத்து சிநதிப்பது மிகப் பொருத்தமானது. "போரின் உண்மையான மறுதலை போரின்மை அன்று அரசியல் சமாதானமும், ஆத்மீக மனித

**அரசியல், பொருளாதாரம், கலாசாரம், சமூகம் அனைத்தையும் உள்ளடக்கிய மனித விடுதலையே முழுமையான விடுதலையாகும். சமயங்கள், தனிமனிதன் முழுமையான வாழ்வைப் பெற, வாழ் வாங்கு வாழத்தக்க கல்வியின் மூலம் ஆத்ம விடுதலையை அடையச் செய்வதையே நோக்கமாகக் கொண்டன. முழுமையான சுதந்திர வாழ்வே ஆத்ம விடுதலையாகும்.**

**'தன்னை தன்னால் அறிய வேண்டும்**
**சாந்தம் பொறுமை உன்னில் தோன்றும்'** *-யோகர் சுவாமி.*

படுத்த முனையும் போது பாடசாலைகளின் முக்கியத்துவம் முனைப்படைகிறது. அந் நிலையில் ஆசிரியர்களே முன்னரங்கிற்கு நகர்த்தப்படுவர்.

விடுதலை என்பது போராண்மையின் உச்ச நிலையிலோ, அதிகாரங்களைக் கைப்பற் றியவுடனே சாத்தியமாவதில்லை. போரின் பின்னரே விடுதலைக்கான பயணம் கடின மானதாகிறது. வெறும் தகவல் மைய அறி வினால் **(information knowledge)** நிலை பேறான விடுதலையை அனுபவிக்கமுடியாது. விடுதலைப் பாதையில் பயணிபவர்கள கருத் தியல் மாற்றம் **(transforamation)** பெற வேணடும். உணர்வுபூர்வமான சிந்தனைத் தெளிவும், விடுதலையில் பற்றுறுதியும் கொணடவர்களாகப் பயிற்றுவிக்கப்படவேண் டும். இப்பணியில் பாடசாலைகளும் ஏனைய கல்வி நிறுவனங்களும் குறிப்பாக ஆசிரி யர்களே முக்கியத்துவமுடையவர்களாகச செயலாற்ற வேண்டும்.

ஒரு நாட்டின் பெருமை அதன் நிலப் பரப்பு, மலைகள், காடுகள், கனிப்பொருள்

# பெறுமானங்கள் கல்வியியல் தத்துவார்த்த வரலாற்று நோக்கு

கள் எங்கும் இதனை விதைக்கத் தலைப் பட்டேன். பாறையிலும், புதர் நிலத்திலும், பண்பட்ட தரையிலும் விதைத்தேன் ஆங் காங்கே முளைத்தது. யாழ். தேசிய கல்வி யியற் கல்லூரியில் விருட்சங்கள் விழுது பாய்ச்சுகின்றன. எம் மண்ணில் சந்திரசேக ரம போன்ற குருக்கள் ஆயிரமாயிரம் என்ற தணியாத தாகத்துடன் செயற்பட்டேன் இத னால் சத்திய சோதனைக்கும் ஆளானேன்.

எண்ணிப் பார்க்கிறேன் அவர் இந்த மண்ணில் அத்தனை இதய சுத்தியோடு நின்றிருக்கவே முடியாது. ஏனெனில், சத்தி யத்திற்காக சாவையும் தழுவும் 'சோக்கிர தீஸம்' அவராக இருந்தது. ஆனால் அதர் மம் தழுவிவரவழைத்த இந்திய இராணு வத்தின் எறிக்ணைகள் அவரைக் குதறி விட்டன. குருதி சிந்தித் தொலைக்கப்பட் டார். ஆனால் அவரைத் தொலைக்கமுடிய வில்லை. அது நானாக இந்தக் கல்லூரியின் பீடாதிபதியாக, இன்னமும் எத்தனையோ பேராக, அவரது குருதியில் தளிர்த்திருக் கின்றது.

அவர் முழு மனிதரல்ல. பலங்களும், பலவீனங்களும் நிறைந்த நல்லாசான். சத் தியத்தை நுட்பமாக, அச்சமின்றி எங்கும் வெளிப்படுத்தும் இதய விசாலம் அவரிட மிருந்தது. அது அவரிடம் கற்றோரை வசீக ரித்தது. அவர் மாணவர்கள் அவரை அறி யாமலே அவரது இலட்சியங்களை இயன் றளவில் விதைக்கின்றனர். பீடாதிபதி கமலநாதன் அவரது பார்வைக் கிரணங்க ளால் சுடப்பட்டவர். அதன் விளைவு இந்தக் கல்லூரியின் ஒவ்வொரு மணதுகள்களிலும் செலுததப்படுகிறது.இந்த நினைவுப் பேருரை அத்தகையதொரு செயற்பாடே.

தன்னம்பிக்கை, மனிதனிடத்தே தனைம்பிக்கையை தோற்றுவிப்பதே பொதுக கல்வியின் நோக்கம்"

-கார்ல் மாக்ஸ்

மனித இனத்தின் அனைத்து விடுதலைக் கும் உந்துசக்தி கல்வியே. மனித சமூக வளர்சசிப் போக்கிலேற்பட்ட பல்வேறு தடை க்ளை அகற்றவும், முரண்பாடுகளைக் களை யவும அடக்குமுறைகளைத் தகர்த்தெறிய வும் நம்பிக்கையூட்டும் சக்தி கல்விக்கேயுரியது.

"பகுத்தறிவுச் சிந்தனையைப் புகுத்தக் கூடிய ஆசிரியர்களைக் கொண்டிருப்பதிலேயே பண்பாட்டின் பெருமை தங்கியுள்ளது என்ற கருத்திற்கமைய ஆசிரியரே கல்விச் செயற் பாட்டின் அடிநாதமாகிறார். ஆசிரியர் மாண வருறவு பலமடையும்போது கல்வியானது செயற்றிறன் வாய்ந்ததாகிறது.

தமிழ் மக்களின் மீது பேரினவாதத்தின் கோரப்பிடி கல்வியை மட்டந்தட்ட முனைந்த போது விடுதலைக்கான முனைப்பு வீறிட் டெழுந்தது. தொடர்ச்சியான யுத்த விளைவினா லும், ஆயுத முரண்பாடுகளாலும் கடற்கோள் பேரழிவினாலும் எமது கல்விச்சூழல ஈடாட் டம் கண்டுள்ளது. தமிழ்ப் பிரதேசங்கள் கல்வியில் வெகுவாகப் பின்தங்கிவிட்டன என்ற கருத்து வெளிக்கொணரப்பட்டுள்ளது.

கல்வியில் ஏற்படும் பின்னடைவு விடு தலையை முழுமைப்படுத்துவதில் பெரும் தடையாக அமையும்.

21ஆம் நூற்றாண்டில் யுத்தமும் ஆயுத முரண்பாடுகளும் உலகெங்கும் அதிகரித் ததன் விளைவாக யுத்த இழப்புக்களும் அதிகரித்துள்ளன. உலக நாடுகள் யுத்தத்திற்கு பின்னுள்ள கால புனரமைப்புப் பற்றிச் சிந் திக்கும் போது அங்கு ஆசிரியர்கள் வகிக் கும் முக்கிய பங்கு பற்றி உணரப்படுகிறது.

2003 ஜுலை மாத முற்பகுதியில் பாரி

குல அமைதியுமே போரின் மறுதலையாகும். போரில்லாத நிலை சமாதானம் ஆகாது. தெளிவுபெற்ற உண்மைநிலையைக் கொணட பேச்சு, கருத்துப் பரிமாற்றம், கருத்து உடன பாடு இவையே உலகிற்கு அமைதியையும, முன்னேற்றத்தையும் தரும். இச்செயல் நிலையே நலம பயக்கும். அதுவே போரின் உண்மையான மறுதலையாகும் உலக சமா தானம் பற்றிய இக்கருத்து எமது இன்றைய சூழ்நிலைக்கும் பொருத்தமானதே.

போர், சமாதானம் என்ற இரு பொருள் பற்றிய வரையறையைத் தெளிவு பெற கல்வி மூலகாரணியாகிறது. விடுதலை

**குமாரசாமி சண்முகநாதன் BEd.MA (Education)**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (மாணவர் அபிவிருத்தி)**
**வலயக்கல்வி அலுவலகம் - வலிகாம வலயம்**

நோக்கிய ஒரு பயணத்தில் பல்வேறு இழப் புக்களின் மத்தியில் சிந்தனைத் தெளிவை மக்களிடத்தில் கல்வியினூடாக ஏற்படுத்து வது பெரும் பயன் விளைவிக்கும். ஒரு சமூ கம் தனது அடிப்படைத்தேவையான உணவு, உடை, வாழிடம், வேலை வாயபபு, வருமா னம் என்பவற்றை போதியளவு பெற்றுக் கொணட நிலையிலும் கல்விக்கு அளப்பரிய முக்கியத்துவம் வழங்குவதுண்டு. தமது வாழ்வுரிமை, வாழ்வியல் வசதிகள் என்ப வற்றைத் தக்கவைத்துக் கொள்வதில் கல்வி யின் அவசியத்தை உணரும் சமூகங்களில் ஆசிரியரின் நிலை சிறப்பாக முன்வைக்கப் படுகிறது.

மார்க்ஸிச சித்தாந்த அடிப்படையில் நடைபெறும் அரசாங்கங்கள் ஆசிரியரையே தமது முதற்தர அரச சேவையாளராகக்

வளங்கள் ஆயுதச் சாலைகள், கட்டடங்கள் ஆகியவற்றைப் பொறுத்ததன்று. அந்நாட்டின் பாடசாலைகளின் நிலைமையும் ஆசிரியர்க ளின் தன்மையும் பொறுத்தது. இன்று போரி னால் சிதைவடைந்த ஓலைக் கொட்டில்க ளால் நிரம்பிய எமது பாடசாலைகள் ஒருபுறம், அழகான தொடர் மாடிக் கட்டடங்கள், நவன நூலகங்கள், செயற்பாட்டறைகள், அளப்பரிய கற்பித்தற் சாதனங்கள், கணனிக் கற்கைக் கூடங்கள் இவை வாய்த்திருக்கும் வளமான பாடசாலைகள் மறுபுறம். ஆனால நல்ல ஆளுமை நிறைநத சுதந்திர மனோபாவ முள்ள உயிர்ப்புடைய ஆசிரியர் இல்லா விடில் அனைத்து வளங்களும் பயனற்றுப் போய்விடும்.

இன்று கல்வி உளவியல், கல்வி ஆலோ சனை வழங்கல் பற்றிப் பல முன்னெடுப் புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் ஆசிரிய மாணவருறவைப் பொருத்தமுறச செய்வதிலேயே கல்விச் செயற்பாடு முழு மையும் தங்கியுள்ளது.

மனித விடுதலை என்பது ஒரு வாழ்க்கைத் தத்துவம். இந்தத் தத்துவார்த்த தெளிவு டன் கரும மாற்றும் ஆசிரியரால், மாணவர் களை விடுதலையின பால் திசைதிருப்ப முடி யும். ஆசிரியரிடம் தெளி வான வாழ்க்கைக கண்ணோட்டம் இன்றேல், மாணவர்களை சரியான பாதையில் எவ்வாறு வழி நடாத் தப்படமுடியும்?

(தொடரும்)

யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# அன்னரச அமிர்த சஞ்சீவி

"அன்னரச அமிர்த சஞ்சீவி"என்றால் என்னவென்று தெரியுமா உங்களுக்கு? நானும் கொஞ்ச நாளைக்கு முன்பு தான் என்னவென்று தெரிந்து கொண்டேன். கிராமத்தில் ஒரு பழைய காலத்து வீடு. அந்த வீட்டில் இருந்த அலுமாரியைச் சுத்தம் செய்த போது பழைய புத்தகம் ஒன்று கிடைத்தது. அதை ஒரு பெரியவர் எடுத்து என்னிடம் கொடுத்தார். வாங்கிப் பார்த்தேன். தலையணை மாதிரி இருந்தது. அவ்வளவு பெரிய புத்தகம். 904 பக்கம். விலை என்ன வென்று பார்த்தேன். 3 ரூபா 12 சதம் என்றிருந்தது.

80 வருடங்களுக்கு முன்பு வெளியான புத்தகம் 20.05.1925 அன்று எட்டாம் பதிப்பு 4000 பிரதிகள் போட்டிருக்கிறார்கள். புத்தகத்தின் தலைப்பு என்ன தெரியுமா? "ஜீவப் பிரம்மைக்கிய வேதாந்த ரஹஸ்யம்" அதில் முதல் பக்கத்தில் என்ன எழுதியிருந்தது தெரியுமா? 'இது வெட்டவெளி பரம்பரையில் வந்த ஸ்ரீநித்யா நந்த சுவாமிகளின் பிரியசிஷ்யராகிய கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்வரர் அவர்களால் இயற்றி சென்னை சூளை "ஸ்ரீபாரதி" அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது என்று எழுதியிருந்தது.

அந்தப் புத்தகத்தைப் புரட்டிய பின்புதான் அன்னரச அமிர்த சஞ்சீவி என்றால் என்ன வென்று புரிந்து கொள்ள முடிந்தது. அது வேறு ஒன்றுமில்லை. 'அன்னரசம்' என்றால் என்ன? அன்னம் என்றால் சோறு. ரசம் என்றால் சாறு. அன்னரசம் என்றால் நீராகாரம். அதுதான் அன்னரச அமிர்த சஞ்சீவி. அந்த அளவுக்கு அதில் விஷயம் இருக்கிறதா என்று நீங்கள் கேட்கலாம். இருக்கிறது! அதுதான் இன்றைய தகவல்.

"பழைய சோறும், அதன் நீரும் சாப்பிட்டு வந்தால் அவர்களுக்கு மலச்சிக்கலில்லாமலும் சரீரத்திற்கு எவ்வித பாதிப்பும் வியாதியும் வராமல் எப்பொழுதும் சுகமாக இருப்பார்கள்." என்று அதில் எழுதியிருக்கிறது. "இது என்ன பெரிய விஷயம்? இரவு எஞ்சிய சோற்றில் தண்ணீரை ஊற்றிவைத்தால் மறுநாள் காலையில் அது தான் பழய சோறு என்று சொல்லத் தோன்றுகின்றதா? அப்படியில்லை. இதில் சில நுணுக்கங்களைச் சொல்லியிருக்கின்றனர். குக்கரில் சோறு சமைக்கும் காலம் இது. அந்தக் காலத்தில் அப்படி இல்லை.

இரவில் சாதம் வடித்த பின்பு ஒரு பாத்திரத்தில் சுத்தமான தண்ணீரை விட்டுக் கொதிக்க விடவேண்டும். சாதம் வடித்த கஞ்சியின் மீது உள்ள ஆடையை எடுத்து விட்டு அந்தக் கஞ்சியை எடுத்துக் கொள்ளவேண்டும். இரண்டு பங்கு இந்தக் கஞ்சி நீர் ஒரு பங்கு கொதித்தாறிய நீர் இரண்டையும் கலந்து வைத்துக்கொள்ளவேண்டும் இரவு எல்லோரும் சாப்பிட்ட பின்பு மீதமாகவுள்ள சாதத்தில் இதை ஊற்றி மூடி வைத்துவிட வேண்டும் அவ்வளவுதான்.

காலையில் எழுந்து பல்தேய்த்து குளித்து எல்லாம் முடிந்த பின்பு சாப்பிட உட்காருங்கள். ஒரு கிண்ணத்தில் சாதத்தை எடுத்துப் போட்டு இரண்டு அங்குல உயரத்திற்கு அந்தத் தண்ணீரையும் ஊற்றி உப்புப் போடுங்கள்.

ஊறுகாய் எதையாவது பக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள். சோற்றைச் சாப்பிட்டு விட்டு அந்தத் தண்ணீரையும் குடியுங்கள். மழைகாலம், குளிர்காலம் என எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஆயுள்முழுதும் இதைச் சாப்பிடலாம். இப்படிச் சாப்பிட்டால் எந்தக் காலத்திலும் எந்த வியாதியும் நம்மை நெருங்காது என்று உத்தரவாதமளிக்கிறார் அந்த மகான்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இப்படி எல்லோரும் சாப்பிடலாம். ஆறுமாதத்தின் பின் அதனுடைய பலன் என்ன வென்று உணர ஆரம்பித்து விடுவீர்கள். அதன் பின் மற்றவர்கள் நிறுத்தச் சொன்னாலும் விடமாட்டீர்கள். இன்னொரு வைத்தியம் உண்டு. குடல் சுத்தமாவதற்கு நீராகாரத்தில் இரண்டு கப் அருந்துங்கள். காலையில் வெறும் வயிற்றில் குடித்து விட்டுத் தாம்பூலம் போட்டு விழுங்க வேண்டும். அந்தப் பழைய சாதத்தில் தயிர், மோர் விட்டுச் சாப்பிடக் கூடாதாம். திமிர், சோம்பேறித்தனம், கொட்டாவி, தூக்கம், மந்த புத்தி எல்லாம் வந்து விடுமாம்.

இப்படி இதுவரையில் கூறியிருக்கும் விடயமெல்லாம் ஒரு மகான் அனுபவத்தில் சோதித்துப் பார்த்து விட்டு நமக்குக் கூறியிருக்கும் விடயங்கள். இது கைகண்ட அன்னரச அமிர்த சஞ்சீவி ஔஷதம் என்று அறியக்கடவது என்று எழுதியிருக்கிறார். அதை இப்போது உங்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளேன்.

நாளைக்கு காலையில் உங்கள் வீட்டு காலை ஆகாரம் வித்தியாசமாக இருந்தால் அதற்காக என்னைத் தேடிக் கொண்டு வராதீர்கள் சண்டைபிடிக்க இதில் மறைமுகமாக நான் உங்களுக்கு ஒரு நன்மையை செய்திருக்கிறேன். அதையும் நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

"உங்கள் வீட்டில் இதுதான் காலை உணவு என்று தெரிந்துவிட்டால் அதன்பின் உங்கள் வீட்டுக்கு விருந்தாளிகள் யாரும் வரமாட்டார்கள். அப்படி வந்தாலும் வரும் வழியில் கடையில் சாப்பிட்டு விட்டு வந்து விடுவார்கள். இதை நினைத்துப் பார்த்தாவது நீங்கள் எனக்கு நன்றி கூறவேண்டும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கிராமிய மட்ட அமைப்புக்கள் பல செயற்படாத நிலையில் உள்ளன!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் பணிமனைப் பிரதேசங்களில் இருக்கின்ற கிராமிய மட்ட அமைப்புக்கான சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், மகளிர் அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் விவசாய சங்கங்களில் பெரும்பாலானவை இயங்காத நிலையிலேயே இருந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக கிராமிய மட்ட அபிவிருத்திப் பணிகளில் மக்களின் உண்மையான பங்களிப்பு பூச்சிய நிலையிலேயே இருந்து வருகின்றது.

இத்தகைய கிராமிய மட்ட அமைப்புக்களில் நிர்வாகப் பிரச்சினைகள், தலைமைத்துவப் போட்டிகள் மற்றும் பொது நிதியைக் கையாள்வதில் ஏற்படும் முரண்பாடுகள் காரணமாக இவை பெரும்பாலும் மூடப்பட்ட நிலையிலேயே இருந்துவருகின்றன.

கிராமிய மட்டத்தில் வாழ்கின்ற குடும்பங்கள் மத்தியில் ஐக்கிய உணர்வையும், பொது நோக்குகளையும் கட்டியெழுப்பி கிராமத்தின் சமூககல்வி- சுகாதார விளையாட்டு மற்றும் பொருளாதார முனைப்புக்களை மேம்படுத்தும் பணியில் ஈடுபடவேண்டிய இவ் அமைப்புக்கள் செயற்படாமல் இருப்பது வேதனைக்குரியதென பொது மக்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இத்தகைய அமைப்புகள் வருடந்தோறும் புனரமைப்புப் பணியில் பெயரளவில் ஈடுபட்டு, சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கு புனரமைப்புக் குறித்த அறிக்கைகளை அனுப்பிவைப்பது வழக்கமாகிவிட்டது.

இது குறித்து கிராமிய மட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் கிராமிய மட்ட அமைப்புக்களிடம் போதிய நிதிவளம், மனித வளம் இல்லாமை மற்றும் செயல்திட்டங்களை அமுல்செய்யக்கூடிய நிர்வாக மற்றும் கட்டமைப்பு வலுக்கள் இல்லாமையினாலேயே இவை செயல்படாமல் இருந்து வருகின்றன என்றும் குறிப்பிட்டனர்.

இது இவ்விதமிருக்க, கடந்த காலங்களில் கிராமிய மட்ட அமைப்புக்களில் தலைமைத்துவ பதவிகளை ஆர்வத்துடன் செயல்படுத்திய பல இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டமையும், இப்போது கிராமங்களில் வாழ்கின்ற இளைஞர்கள் தலைமைத்துவங்களை ஏற்க முன்வராமையும், அடிப்படைக் காரணங்களாகக் கொள்ளப்படுகின்றன.

இத்தகைய கிராமிய மட்ட அமைப்புக்களின் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் பொறுப்பான திணைக்கள அதிகாரிகள் தொலை நோக்குப் பார்வையை அடிப்படையாகக் கொண்டு இவற்றினை நல்ல முறையில் இயங்கச் செய்ய அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என மக்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

(க-16)

# எண்ணை தாங்கி நிலையத்திற்கு அமைச்சர் மங்கள சீல் வைப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் சீன நிறுவனமொன்றின் ஒப்பந்த அடிப்படையில் அமைக்கப்படவிருந்த எண்ணெய் தாங்கி நிலையத்திற்கு துறைமுக அமைச்சர் மங்கள சமரவீர சீல் வைத்துள்ளார்.

இத்திட்டத்திற்கு 33 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளபோதும் அமைச்சர் 100 மில்லியன் அமெரிக்க டொலரினை கடன் வழங்க இருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

100 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அம்பாந்தோட்டையில் எண்ணெய்க் குதம் ஒன்றை அமைத்துத் தருமாறு இலங்கை அரசாங்கம் சீன நிறுவனத்திடம் கோரியிருந்தது. ஆனால் இதற்கு ஆகக் கூடியது 33 மில்லியன் அமெரிக்க டொலர்களே தேவைப்படும் என மதிப்பிடப்பட்டது.

இதேவேளை, இப்பணிக்கென அமைச்சரவை அங்கீகாரத்துக்கு விடப்பட்டபோது மார்ச் 23 அன்று மிகுதி 67மில்லியன் அமெரிக்க டொலருக்கான காரணத்தை விளக்க அமைச்சரால் முடியாது போய்விட்டது. இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டிருக்கவில்லை.

இதனால் இக் கூட்டத்தில் நடைபெற்றது எதுவும் தனக்குத் தெரியாது என பிரதமர் கூறியிருந்தார்.

இப்பணிக்கான மதிப்பீட்டினை கடந்தவருடம் ரம்போல் என்ற அமைப்பு நடாத்தியிருந்தது. எண்ணெய்க் குதம் உட்பட கரையோரப் புனரமைப்பிற்கும் சேர்த்து 33 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிட்டிருந்தது இந்நிறுவனம்.

பல்வேறு சர்வதேச நெருக்குதல்களால் மேற்படி திட்டத்தை கைவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக கடந்த வியாழனன்று அமைச்சர் விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். (ந-6)

# திக்குத் தெரியாத காட்டில் சிக்கித் தவிக்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

சிங்களப் பேரினவாதத்திற்கு தனது போலி முகம் காட்டி தன் செல்வாக்கை தக்கவைத்துக்கொண்டிருந்த ஜே.வி.பி. தற்போது அண்மைக் காலமாக பேரினவாத முகத்தை யாரோ ஒரு சக்தி வாய்ந்த நாட்டிடம் அடகு வைத்துவிட்டு திக்குத் தெரியாத காட்டில் சிக்கித் தவிப்பதாக கொழும்பு அரசியல் ஆய்வாளர்களும் கொள்கை வகுப்பாளர்களும் தெரிவித்துள்ளனர்.

'ஜே.வி.பியின் இந்த திசை தெரியாத பாதையை உறுதிப்படுத்த பல்வேறு நிகழ்வுகளை இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஜே.வி.பியின் இந்த நீர்த்துப் போன தன்மையை சாதாகமாக்கி அதன் ஒரு பிரிவினரை ஜனாதிபதி சந்திரிகா விலைபேசி இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பொதுக்கட்டமைப்பை மிகக் கடுமையாக எதிர்ப்பதாக ஜனாதிபதி சந்திரிகாவால் சர்வதேச சமூகத்திற்கு அடையாளம் காட்டப்பட்ட ஜே.வி.பியின் சில அமைச்சர்கள் பொதுக்கட்டமைப்பு தொடர்பான கண்டி மாநாட்டில் பங்கேற்றது. ஜனாதிபதியின் குற்றச்சாட்டு ஒரு குழப்பமானதாக இருப்பதையும் சர்வதேச சமூகம் அவதானித்து இருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகாவிற்கு எதிரான அணியை உருவாக்க மங்கள சமரவீரவை முன்வைத்து ஜே.வி. பி காய்களை நகர்த்திய போது சமரவீரவின் அமைச்சு அதிகாரங்களை மட்டுப்படுத்தி அவரை அடக்கி வைக்க சந்திரிகா நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார்.

இதன் ஒரு பகுதியாகவே லேக்ஹவுஸ் நிர்வாகத்தை சமரவீரவிடமிருந்து பறித்து தான் நியமித்த ஒரு குழுவிடம் ஜனாதிபதி ஒப்படைத்தார். என்பதை சுட்டிக் காட்டும் அவதானிகள் ஆனால் சூழல் தற்போது திசை மாறி இருக்கிறது. என்று மேலும் சில நிகழ்வுகளை எடுத்துக் காட்டுகின்றனர்.

அண்மையில் கண்டி மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக நடந்த ஜே.வி.பியின் மத்திய குழுக்கூட்டத்தில் மாநாட்டை புறக்கணித்து வெளிநடப்பு செய்வது குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் ஆனால் மூத்த ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஷ அமரசிங்கதான் அமைச்சர் விஜித ஹேரத் மாநாட்டில் பங்கேற்க அனுமதி அளித்ததாகவும் கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளதை சுட்டிக்காட்டும் அவதானிகள் ஜே.வி.பியின் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளை சோமவன்ஷ தான் தடுத்து வரு கிறார் எனவும் தெரிவித்தனர்.

அதேபோல் ஜே.வி.பியை விமர்சனம் செய்து கண்டி மாநாட்டில் சந்திரிகா உரையாற்றியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்பு செய்யாலாம் என்று ஜே.வி.பி கண்டி அரங்கில் முடிவு செய்தபோது அதனையும் சோம வன்ஷ அமரசிங்க தான் எதிர்த்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரூபவாஹினியில் ஜே.வி.பியை தாக்கி ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த கருத்துக்களை பதிலளிக்க வேண்டும் என்ற ஜே.வி.பியின் கோரிக்கையை ரூபவாஹினி நிர்வாகம் நிராகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் ஜே.வி.பி. தலைமை நீர்த்துப் போயிருப்பதை உணராத சிலருக்கு சோமவன்ஷ அமர சிங்க நந்தன குணதிலக்க விமல் வீரவன்ஷ உள்ளிட் டோரின் ஜப்பானியப் பயணம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பையும் தமிழர் தாயகத்தை ஆட்சி செய்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஏற்றுக்கொண்டிருக்கும் ஜப்பான்,தமது நாட்டிற்கு வருகை தரும் ஜே.வி.பி. குழுவினரிடம் உண்மை நிலையைத் தெரிவித்து பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவாக சூழலை ஏற்படுத்தக் கூடும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இதனால் ஜே.வி.பியின் ஒரு தரப்பினர் பொதுக் கட்டமைப்பை ஆதரித்தும் ஒரு பிரிவினர் எதிர்த்தும் நிலையை மேற்கொள்ளும் அரசியல் கூத்துகள் விரைவில் தென்னிலங்கையில் வெளியாகக் கூடும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

சிங்களவர்களின் இனவாதக் குரலை வெளிப்படுத்தி வந்த ஜே.வி.பி. இப்போது ஜனாதிபதி சந்திரிகாவின் குரலை வெளிப்படுத்துவதா? அல்லது தெற்காசிய பிராந்திய நலனுக்கு எதிரான பொதுக் கட்டமைப்பு அண்டை நாடுகளுடனான நல்லுறவுக்கு எதிரானது பொதுக்கட்டமைப்பு என்று எழுதிக் கொடுத்த நாட்டின் குரலை ஆதரிப்பதா?, என்ற குழப்பத்தில் இருப்பதாகவும் கொழும்பு கொள்கை வகுப்பாளர்களும் அரசியல் அவதானிகளும் தெரிவிக்கின்றனர். (க-4)

# சுற்றிலும் அணு ஆயுத நாடுகள் அதனால் நாமும் மாறிவிட்டோம்

## -இந்திய ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம்



(மொஸ்கோ)

இந்தியா ஒரு பொறுப்புள்ள நாடு. பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களைப் பரப்பக்கூடிய நாடாக அது ஒருபோதும் இருந்ததில்லை. இனியும் இருக்காது. எங்களைச் சுற்றி அணு ஆயுத நாடுகளாகவே உள்ளன. எனவே நாங்களும் அணு ஆயுத நாடாக மாறிவிட்டோம். எங்களுக்கு அதைத்தவிர வேறு வழியில்லை என்று இந்திய ஜனாதிபதி டாக்டர் அபதுல்கலாம்மொஸ்கோவில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் ரஷ்யா, சுவிற்சர்லாந்து, உக்ரைன், ஐஸ்லாந்து ஆகிய 4 நாடுகளில் 14 நாட்களில் சுற்றுப்பயணம் செய்கிறார். கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் டெல்லியிலிருந்து புறப்பட்டு மொஸ்கோ போய்ச சேர்ந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மொஸ்கோவில் ரஷ்யப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஜனாதிபதி கலாம் நேற்று முன்தினம் ஆற்றிய உரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஆணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடவில்லை. இருந்தபோதிலும் கூட பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை பரப்பாத நாடாகவே அது இருந்து வருகிறது.

காரணம் இந்தியா ஒரு பொறுப்புள்ள நாடாகும்.

சர்வதேச பிரச்சினைகளில் இந்தியா எப்படி பொறுப்போடு நடந்து கொள்கிறது என்பதை வளர்ந்த நாடுகள் உணர்ந்து வ்ட்டன. எல்லா நாடுகளுமே இந்தியா தங்களுகது நட்பு நாடாக இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகின்றன.

பிரதமர் மன்மோகன்சிங்கும், பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பும் சமீபத்தில் பேச்சு நடத்தினார்கள். அதனால் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ரயில் போக்குவரத்து இரு நாடுகளிடையே ஏற்பட்டுள்ளது. பஸ் போக்குவரத்தும நடந்து வருகிறது.

சீனப் பிரதமர் வெண்ஜியாபோ இந்தியாவுக்கு சமீபத்தில் வந்தார். அவரோடு நாங்கள் பல்வேறு விடயங்களில் ஆலோசனை நடத்தினோம். இதனால் பரஸ்பரம் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எல்லைப்பகுதியில் தற்போது அமைதி நிலவுகிறது என்றார்.

மொஸ்கோவில் பல்வேறு நிகழ்ச்சிகளில அவர் கலந்துகொண்டார். சோவியுத் யூனியன சிதறுண்ட பிறகு மொஸ்கோவுக்கு சென்றிருக்கும் முதல் ஜனாதிபதி அப்துல் கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# காா்க்குண்டுத் தாக்குதல் பக்தாத்தில் 5 பேர் பலி

(பக்தாத்)

பக்தாத்தின் தென்பகுதியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றின அருகே தீவிரவாதிகள் மேற்கொண்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இதில் காயமடைந்தோர் கவலைக்கிடமான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் அதிகமானோர் சிறுவர்களாவர்.

இதேவேளை, நேற்று முன்தினம் ஈராக்கின் உணவு விடுதிக்கருகே தற்கொலை தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈராக்கில் புதிய அரசு அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே கடந்த சில வாரங்களாக தீவிரவாதிகள் நடத்தி வரும் தொடர் தாக்குதலில் இதுவரை பலர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

WORLD NEWS உலக தரிசனம்

# பங்களாதேஷில் சூறாவளி 15பேர் பலி; 100பேர் காயம்

(டாக்கா)

பங்க்ளாதேஷில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீசிய கடும் சூறாவளியில் 15 பேர் உயிரிழந்துள்ளதுடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

மேலும் இதனால் ஆயிரக்கணக்கான வடுகள் சேதமடைந்தன. ஏராளமான மின்சாரக கம்பங்கள் பெயர்ந்து விழுந்தன.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மின்னல் தாக்கியதாலேயே உயிரிழந்துள்ளனர். மரங்கள் விழுந்த போதும், மின்சாரக் கம்பங்கள் சாய்ந்து விழுந்தபோதும் அருகில் இருந்தவர்கள் பலத்த காயம் அடைந்துள்ளனர்.

காக்ஸ் பஜார் என்ற இடத்தில் வயலில் நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்தபோது மின்னல் தாக்கி 8 கிராமவாசிகள் இறந்துள்ளனர்.

சூறாவளியில் சிக்கி வீட்டுக்கூரைகள் பறந்ததாலும் வீடுகள் கீழே விழுந்து சரிந்ததாலும் 1,500க்கும் மேற்பட்டோர் வீடுகளை இழநதுள்ளனர்.

கோடைக்காலம் இன்னமும் முடியவில்லை. என்றாலும் இம் மாதிரி சூறாவளியும் மழையும் இப்படித் தொடர்வது பங்களாதேஷில் வழக்கமான ஒனறு எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# அநாமதேய செய்திகள்

## நியூஸ் வீக் திடீர் முடிவு

(வோஷிங்டன்)

குவான்டனாமோ சிறையில் இஸ்லாமியர்களின் புனித நூலான குர் - ஆன் அவமதிக்கப் படடதாக தவறான தகவல் வெளியிட்ட நியூஸ் வீக் பத்திரிகை இனிமேல் இதுபோன்ற அநாமதேய செய்திகளுக்கு ஆசிரியா குழுவிடம் ஒப்புதல பெற்ற பின்னரே வெளியிடப்படும் என்று அறிவித்துள்ளது.

கியூபா அருகே குவான்டனாமோ சிறையுள்ளது. அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இச்சிறையில், இஸ்லாமியர்களின் புனித நூலான குர்-ஆனை கழிவறையில் வீசி அமெரிகக வீரர்கள் அவமதித்ததாக பிரபல நியூஸ வீக் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

ஈராக் மீது போர் தொடுத்தது, அபுகிராப் சிறையில் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டது ஆகியவற்றால் ஏற்கெனவே கொந்தளிப்பில உள்ள முஸ்லிம் நாடுகள இந்தச் செய்தியால், இன்னும கொதித்துப் போயுள்ளன.

உலகம் முழுவதும் முஸ்லிம் நாடுகளிலும், மற்ற நாடுகளிலும் அமெரிக்காவைக் கண்டித்து முஸ்லிம்கள் போராட்டம் நடத்திக கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன், இச்செய்தி குறித்து விசாரித்ததில இச்செய்தியல் உண்மை இல்லை என்று அறிவித்தது.

அநாமதேய தகவல் மூலம் இச்செய்தி கடைத்ததாகவும் அது தவறான செய்தியாகிவிட்டதாகவும் நியூஸ் வீக் பத்திரிகை விளக்கம் அளித்துள்ளதுடன் இதுபோன்ற அநாமதேய வட்டாரங்கள் மூலம் கிடைக்கும செயதிகளை வெளியிடுவதில் முக்கிய முடிவும் எடுக்கப்படடுள்ளது.

ஆசிரியா, நிர்வாக ஆசிரியா மற்றும் இதர மூத்த ஆசிரியர்களிடம் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே இனிமேல் இப்படிப்பட்ட செய்திகள் வெளியிடப்படும் என்று நியூஸ் வீக் பத்திரிகை அறிவித் துள்ளது.

நியூஸ் வீக் தலைவரும் தலைமை ஆசிரியருமான ரிச்சர்ட் ஸ்மித் ஆசிரியா பக்கத்தில் எழுதியுளள கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ற)

# எடை குறைய சிகிச்சை பெற்றுவந்த 11 மாதக் குழந்தை மரணம்

(கொல்கத்தா)

உடல் எடையைக் குறைப்பதற்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த லோக்மான ஹக்கீம் என்ற 11 மாதக் குழந்தை உயிரிழந்துள்ளது.

இக்குழந்தை இறந்தமைக்கு டாக்டர்களின் கவனக்குறைவே காரணம் என தந்தை புகார் செய்துள்ளார்.

மேற்குவங்கம் முர்ஷிதாபாத் மாவட்டம் தாம்கோலைச் சேர்ந்த அப்துல் லத்தீப் -கனீரா பீவி தம்பதியருக்கு கடந்த 11 மாதஙகளுக்கு முன்பு ஆண் குழந்தை பிறந்தது.

லோக்மான் ஹக்கீம் என்று அந்தக் குழந்தைக்கு பெயர் சூட்டினர். குழந்தையின் எடை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. 11 மாதத்தல் குழந்தையின் எடை 21கிலோவாக உயர்ந்தது.

குழந்தையின் தாய் தினசரி 2.5 கிலோ அரிசி சாதமும் 5 லீற்றர் பாலும் கொடுத்துள்ளார். குழந்தை லோக்மானின் உடல் எடையைக் குறைக்க அவனது பெற்றோர் கொல்கத்தாவல் உள்ள எஸ்.எஸ்.கே.எம் மருத்துவமனையில் சேர்ததனர். சிகிச்சை பலனளிக்காமல் லோக்மான கடந்த ஞாயிற்றுககிழமை பரிதாபமாக உயிரிழந்தது.

இது குறித்து டாக்டர்கள் கூறுகையில், லோகமானுக்கு வழங்கப்பட்ட அதிக திட உணவால் உணவுக்குழாயில் அடைப்பு ஏற்பட்டு மூச்சுத் திணறலுடன் வாந்தியும் அடிக்கடி ஏற்பட்டது. இதனால் நிமோனியா வந்து குழந்தை இறந்தது என்று கூறினார்.



குழந்தை லோக்மான் ஹக்கீமின் உடலை பிரேத பரிசோதனை செய்த டாக்டர் தேபாசிஷ் சர்கார், பரிசோதனையின் போது அவனது உணவுக் குழாய் முழுவதும் உணவுத் துகள்கள் நிறைந்திருந்தன. அதனால்தான் அவனுக்கு வாந்தியும நிமோனியாவும் ஏற்பட்டு இருக்கிறது என்றார்.

இதற்கிடையே லோக்மானின் தந்தை அப்துல் லத்தீப் டாக்டர்கள் சரியான முறையில் சிகிச்சை அளிக்காததால் தன்னுடைய மகன் இறந்துவிட்டான் என்று புகார் அளித்துள்ளார். (ற)

# ஒட்டிப் பிறந்த இரட்டையர் நலம்



(சிங்கப்பூர்)

இந்தோனேஷியாவில் ஒட்டிப்பிறந்த சகோதரிகள் அங்கி - அஞ்சலி ஆகியோர் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு இப்போது தேறி வருகின்றனர்.

சிங்கப்பூரில் உள்ள கிளென் ஈகிள்ஸ் மருத்துவமனையில் கடந்த சனிக்கிழமை 16 டாக்டர்கள் தொடர்ந்து 10 மணி நேரம் அறுவைச் சிகிச்சை செய்து இவர்களைப் பிரித்தனர். வயிற்றிலும், தொடையிலும் ஒட்டிப் பிறந்த இவர்களைக் கடந்த 15 மாதங்களாக ஒன்றாகவே பராமரித்து வந்தனர். இவ்விருவருக்கும் சேர்தது 3 கால்கள்தான் இருந்தன.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு இருவருக்கும் தலா ஒரு கால் தான் கிடைத்தது. இனி இருவருக்கும் இன்னொரு செயற்கைக் கால் பொருத்தப்படும். இவர்களில் அஞ்சலிகது இருதயத்தில் சிறிய ஓட்டை இருக்கிறது. எனவே இவரைக் கூடுதல் கண்காணிப்பில் வைத்துள்ளனர். இந்த அறுவைச் சிகிச்சைக்கு இதுவரை சிங்கப்பூர் டொலர் மதிப்பில் 4.5 இலட்சம் செலவாகியிருக்கிறது.

ஒட்டிப் பிறக்கும் குழந்தைகள் 60 சதவீதம் கருவிலேயே இறந்து விடுகின்றன. 35 சதவீதமாக அதிகபட்சம் 24 மணி நேரம் தான் இவ்வாறான குழந்தைகள் உயிர் வாழ்கின்றன.

அபூர்வமாகத் தப்பிப் பிழைக்கும் குழந்தைகள் பல்வேறு நோய்களால் தொடர்ந்தும் படிக்கப்படுகின்றன. இதயம், நுரையீரல், சிறுநீரகம் போன்ற முக்கிய உள் உறுப்புகளை இக்குழந்தைகள் பகிர்ந்துகொள்ள வேண்டியிருப்பதால் இந்நிலைமை ஏற்படுகிறது.

எனினும் இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி பிரிக்கப்பட்ட இரு குழந்தைகளும் நலமுடன் இருப்பதாக அறியப்படுகிறது. (ற)

# எவரெஸ்ட்டின் உயரத்தை அளந்து சீனக் குழு அறிக்கை சமர்ப்பிப்பு

(பீஜிங்)

சீனாவைச் சேர்ந்த மலையேறும் குழுவினர் மற்றும் விஞ்ஞானிகள் அடங்கிய 24பேர் கொணட குழு நேற்று முன்தினம் எவரெஸ்ட் சிகரத்தை சென்றடைந்தது.

மலை உச்சிககுச் சென்ற குழுவினர் அதன் உயரத்தையும் மறு அளவீடு செய்தனர். ஆய்வு செய்ததற்கு அடையாளமாக அங்கு ஒரு சினனத்தையும நட்டு வைத்துளளனர்.

இது குறித்து சீனாவைச் சேர்ந்த சினுவா செய்தி நிறுவனம் கூறியதாவது,

எவரெஸ்ட்டின் நிலப்பரப்பு நேபாளம் மற்றும் சனாவின் எல்லையில் பரவலாக உள்ளது. எவரெஸ்ட் சிகரம் கடல் மட்டத்தில் இருந்து 8 ஆயிரத்து 848.13 மீற்றர் உயரத்தில் உள்ளது என சீனாவைச் சேர்ந்த ஆய்வாளர்கள் 1975 ஆம் ஆண்டு அதன் உயரத்தை அளந்து கூறினர்.

தற்போது எவரெஸ்ட் சிகரத்தை மீண்டும் அளக்க சீனாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் முடிவு செய்தனர்.

மலையேறும் குழுவினர் மறறும் விஞ்ஞானிகள் அடங்கிய 24பேர் கொண்ட குழுவினர் பீஜிங் நேரப்படி நேற்று முன்தினம் சரியாக 12.25 (0955ஜ.எஸ்.டி) மணிக்கு எவரெஸ்ட் சிகரத்தை அளந்து முடித்தனர்.

சிகரத்தின் உயரத்தை ஜி.பி.எஸ். (குளோபல் பொசிஷனிங் சிஸ்டம்) மற்றும் ரேடார் கருவிகள் துணையோடு அளந்து முடித்தனர். மலை உச்சியில் ஏறக்குறைய 77 நிமிடங்கள் இவர்கள் இருந்தனர். பணி முடிந்ததும் தங்களுடைய அறிக்கையை இமயமலையில் உள்ள மலையேற்றத் தலைமையிடத்திற்கு பணி அனுப்பி வைத்தனர். அளந்து முடித்ததற்கு அடையாளமாக அங்கு ஒரு அடையாளச சின்னத்தையும் அவர்கள் நட்டு வைத்துள்ளனர். (ற)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் -குறள்

வலம்புரி

## மீண்டுமோர் யுத்தம் வெடிக்குமா...!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இன்னமும் சிங்கள ஆட்சியாளர்களிடம் ஓர் தெளிவான திட்டமில்லை.

சமாதானம் என்ற பேரில் காலம் கடத்துவதும் சர்வதேச நாடுகளை ஏமாற்றி உதவி பெறுவதுமான கபட நோக்கம் அரசிடம் இருக்கும் வரை இலங்கைத் தீவில் சமாதானம் என்ற பேச்சுக்கே இடமிருக்க மாட்டாது.

உலகநாடுகளைப் பொறுத்தவரை அரசு-மக்களாட்சி என்ற சொற்பதங்களை மட்டுமே அவை எடுத்துக்கொள்கின்றன. ஒரு நாட்டின் அரசு அந் நாட்டில் உள்ள எல்லா மக்களையும் சம உரிமையுடன் பாதுகாக்கின்றதா? இன,மொழி, மத வேறுபாடுகளுக்கு இடம் தராது தனது அரசாட்சியை நடத்துகின்றதா? என்ற கேள்விகளுக்கு கிடைக்கின்ற பதிலைப் பொறுத்தே 'அரசுக்கான' சிறப்பை வழங்க வேண்டும்.

இதை விடுத்து ஓர் அரசு எவ்வளவுதான் தலைகீழாக நடந்தாலும் அது பற்றி யாருமே வாய்திறக்கக் கூடாது. அரசை எதிர்த்தால் அது பயங்கரவாதம் என்ற எண்ணப்பாட்டை உலக நாடுகள் தமது மனத்திரையில் இருந்து அகற்றிவிட வேண்டும்.

குறிப்பாக இலங்கை இன விவகாரத்தில் சிங்கள அரசுகள் நடந்துகொள்ளும் முறை குறித்து உலக நாடுகள் சீர்தூக்கிப்பார்த்து உண்மை நிலையை பகிரங்கப்படுத்த வேண்டும்.

அரசு விடுகின்ற தவறுகளை எல்லாம் மூடி மறைக்க முற்படுவதன் காரணமாகவே சர்வதேசத்தின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு இலங்கை அரசு தப்பிக் கொள்கிறது.

இலங்கையில் தமிழ்மக்களுக்கு பிரச்சினை உண்டு என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளுமாயின் அதற்கு உடன் தீர்வுகாண முன்வரவேண்டும். 'பிரச்சினை' இருக்குமானால் அதனை அப்படியே விட்டுவிடுவது பிரச்சினைக்கான தீர்வாக மாட்டாது. காலம் கடக்கின்ற ஒவ்வொரு கணத்திலும் பிரச்சினையின் சுற்றளவும் விரிந்து கொண்டே செல்லும். இதற்கு இலங்கை விவகாரம் நல்லதோர் உதாரணமாகும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் அடிப்படையில் அரசும்-விடுதலைப்புலிகளும் போர்நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு 3வருடங்கள் கடந்துவிட்டன. ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் கூட்டங்களும் தடல் புடலாக நடைபெற்றன.

கூட்டங்கள் நடைபெற்ற வேகமும் அமெரிக்க பிரதிநிதி கிறிஸ்ரினா றொக்கா,ஜப்பான் விசேடதூதுவர் யசூசி அகாசி ஆகியோர் இலங்கைக்கு வந்துபோன அவசரங்களும் இப்பவே பிரச்சினை தீர்ப்போகின்றது என்ற தோற்றப்பாட்டை மக்களுக்கு ஏற்படுத்தியது.

ஆனால் அவையெல்லாம் ஆடி அடங்கிப்போனமை அதிர்ச்சியான விடயமே. நம்பியிருந்த மக்கள் ஏமாந்து போயினர். யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாடே சமாதான சூழ்நிலைக்கு குந்தகமாக அமைந்து விட்டது.

அதனைத்தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அதிகார ஆசை ஆட்சியைக் கலைக்க ஜே.வி.பியின் கைப்பிடியோடு புதிய அரசு பதவியேற்றது. நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டுமானால் எது நடக்கக்கூடாதோ! அது நடந்து விட்டது.

ஆம், ஜே.வி.பி ஆட்சிக்கு வந்துவட்டது. அதனால் சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதம் அடைந்தன. இருந்தும் சர்வதேச நாடுகள் மௌனத்தை மட்டுமே கடைப்பிடிக்கின்றன.

எப்பாடுபட்டாவது யுத்தத்தை ஆரம்பிக்கவேண்டும் என்ற ஆவலில் பல்வேறு குழப்பங்களை ஜே.வி.பி ஏற்படுத்தியிருந்தாலும் அதனை விடுதலைப்புலிகள் பொறுத்துக்கொண்டனர். இப்போது திருகோணமலை நகரப்பகுதியில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை புதிய பிரச்சினை ஆகிவிட்டது.

சமாதானத்தை அடைவதற்காக யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்துகொண்டாலும் உடன் படிக்கையின் கால அசைவு மீண்டும் ஓர் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான சாத்தியப்பாட்டையே கொண்டுள்ளது.

எதுவாயினும் நாட்டில் மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படுவதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்பவில்லையாயின் அதற்கு இருக்கக் கூடிய ஒரேஒரு வழி தினமணிப்பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டயோசனையை உடனடியாக அமுல் படுத்துவதாகவும், ஜே.வி.பியை ஓரம் கட்டுவதே இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கான ஒரேவழி என்பதே தினமணியின் ஆசிரிய தலையங்கம் தரும் ஆலோசனையாகும்.

# யுத்தத்தை விடுத்து பேச்சு மூலமே வட-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு யுத்தத்தை விடுத்து பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வெசாக்பௌர்ணமியை முன்னிட்டு ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த 20 ஆண்டுகளாக நடைபெற்ற கொடிய யுத்தத்தினாலும், குண்டுவெடிப்புக்களினாலும் பெறுமதிமிக்க பல உயிர்களைப் பறிகொடுத்துவிட்டோம். எனவே இனி எம்மால் யுத்தம் என்ற சொல்லைக்கூட சொல்லமுடியாத நிலைகாணப்படுகின்றது.

ஆனால், நாட்டின் தற்போதைய சூழ்நிலையை வைத்துப் பார்க்கும் போது மீண்டும் யுத்தம் வெடிக்கும் என்ற அபாயமே காணப்படுகின்றது.

ஆனால், நாமும் யுத்தத்திற்குச் செல்லமாட்டோம். விடுதலைப் புலிகளும் யுத்தத்திற்கு செல்லமாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

அதுவே எமக்கு பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்க ஒரு தொடர்பினைத் தருவதாக அமைந்துள்ளது.

போரில் ஈடுபட்டிருந்த சிலர் தற்போது அதிலிருந்து விலகி வன்முறைகளில் ஈடுபட்டுவருவது தற்போது பல சிக்கல்களை உருவாக்கியுள்ளது. பாடசாலை மாணவர்கள் கூட வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். இந்த நிலைமையினை வைத்துப் பார்க்கும்போது நாடு மோசமான நிலையினை நோக்கிச் சென்று கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவற்றைத் தொடர ஒரு போதும் அனுமதிக்க முடியாது. தற்போதைய பிரச்சினைகளுக்கு அரச தரப்பும், தமிழீழ விடுதலைப்புலிகளும் உடனடியாக அமுலாகும் வகையில் சில காரணங்களை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, 58 வருடங்களாக எமது தரப்பில் தவறுகள் இடம்பெற்றுத்தான் வந்திருக்கின்றது. எனினும் தமிழரா, சிங்களவரா அதிக தவறுகளைச் செய்திருப்பதாகக் கணக்கிடாமல் பிரச்சினைகளைப் பேசித்தீர்க்க அனைவரும் முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

நாடடில் தற்போது நிலவிவரும் அரசியல் பிரச்சினைகளுக்கும், படுகொலைகளுக்கும் முடிவொன்று தேவை. செயல் ரீதியாக நடைமுறைப்படுத்த முடியும் என்றால் மட்டுமே அதற்குரிய தீர்வைப் பற்றி தெரிவித்து பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

காலத்தை வீணடிப்பதால் எதுவித பிரயோசனமுமில்லை குரோதங்களையும், வைராக்கியங்களையும் வைத்துக் கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சித்தால் அது பயனளிக்காது.

பிரச்சினைகளைப் பேசித்தீர்ப்பதற்கான வழிகளையே சகல மதங்களும் போதிக்கின்றன. அதற்கமைய பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியாத பிரச்சினைகள் எதுவுமே இல்லை என்றே நான் கருதுகிறேன்.

போராட்டத்தில். ஈடுபட்டவர்களை சாதாரண வாழ்க்கைக்குக் கொண்டு வரச் சற்று காலம் செல்லும். எனினும் சாதாரண வாழ்க்கைக்கு அவர்களைக் கொண்டுவர முடியாது என நான் ஒருபோதும் நினைக்கவில்லை.

இந்த நாட்டின் வரலாற்றைப் பொறுத்தவரை அது சாத்தியமானதே. காரணம் தவறுகளைச் செய்த பலர் இன்று சாதாரண வழிக்கு வந்துவிட்டனர். அவ்வாறானோர் அரசாங்கத்திலும் இருக்கின்றனர்,ஆட்சியும் செய்கின்றனர்.

எனவே, ஏனையவர்கள் மீதான தனிப்பட்ட வெறுப்புக்களை ஒதுக்கி நாட்டினை முன்கொண்டு செல்ல அனைவரும் முன்வர வேண்டுமெனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(ந-4)

# 15 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத வீதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல பிரதான வீதிகளும், கிராமிய வீதிகளும் கடந்த பதினைந்து வருடங்களுகசு மேலாக திருத்தம் செய்யப்படாமல் இருப்பதால், அவை குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் தமது பிரயாணங்களை மேற்கொள்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வீதிகளுக்கு அடிப்படையிலான திருத்த வேலைகளை நிரந்தரமாகச்செய்யாமல், அவ்வப்போது சிறு சிறு ஒட்டுவேலைகளை மட்டுமே சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் காலத்துக்குக் காலம் செய்து வருகின்றன.

அதேசமயம், யாழ்.மாவட்ட வீதிகள் சீரில்லாமல் இருப்பதால் வாகனஙகள் பிரச்சினைகள் இன்றிச் செல்வதென்பது சாத்தியமானதாகத் தெரியவில்லை.

இது இவ்விதமிருக்க, யாழ்ப்பாண மாவட்டத்தில் நாவற்குழி, வல்லை மற்றும் வண்ணாத்திப்பாலம் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ந-16)

# போர் நிறுத்த காலத்திலும் பொருட்களுக்கு தடை விதிப்பு

## உடன்படிக்கைக்கு முரணானது என்கிறார் ஜெயா எம்.பி

(கொழும்பு)

யுத்தகாலத்தில் பொருட்களுக்கு தடைவிதிக்கப்பட்டது போலவே சமாதான காலத்திலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை உடனடியாக நீக்குமாறு கோரி மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி பிரதிப் படைத்துறை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அதில் கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு வடக்கு, வாகரைப் பிரதேசம் மேற்கு, பட்டிருப்புப் பாலம், செங்கலடி கறத்தப் பாலம், வாகரையின் நுழைவாயிலான மாங்கேணிச் சோதனைச் சாவடியூடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு கட்டடப் பொருட்கள் சீமெந்து மற்றும ஏனைய பொருட்களுக்கு இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கிராம சேவையாளர், பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர் ஊடாக அனுமதிப் பத்திரத்தினைக் கோரி அசௌகரியத்தினை ஏற்படுத்துகின்றனர். அதாவது போர் நிறுததம் நடைமுறையில் உள்ள போது இவ்வாறு தடை விதிப்பது போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு முரணான செயலாகவே இருக்கிறது.

அது மட்டுமன்றி வாகரைப் பிரதேசம் சுனாமியால் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். இங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களே வீட்டுத் திட்டத்தினை அமைத்து வருகின்றன. இவ்வாறு இவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதனால் பெரும் சிரமத்தினை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இதுவரை காலமும் அரச பிரதிநிதிகள் யாரும் இதில் அக்கறை எடுக்க விலலை. மக்களின் துன்பங்கள் உடனடியாக நீக்கப்பட வேண்டும. இதனால் இந்தத் தடையினை நீக்குமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்குக் கோரிக்கை விடுத்துள்ளதாக இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-4)

## பொதுக்கட்டமைப்பு பாராளுமன்றத்துக்கு கட்டுப்பட்டதே என்கிறார் ஜயந்ததனபால

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளுக்காக இலங்கையில் தமிழ் மற்றும் சிங்களப் பிரதேசங்களில் அமைக்கப் படவிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பொதுக் கட்டமைப்பானது இலங்கை நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டதே என்று அரச சமாதான செயலகப் பணிப்பாளா ஜயந்ததனபால கூறியுள்ளார்.

இது குறித்து ஜயந்த தனபால மேலும் கூறுகையில்,

பொதுக்கட்டமைப்பு எந்த அமைச்சின் கீழ் வரும் என்பதை கூற இயலாது. ஆனால் பொதுக்கட்டமைப்பின் செயல்பாடுகள குறித்து கேள்விகள் எழுப்பப்படும் போது உரிய அமைச்சின் கீழ் பதிலளிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பானது இலங்கை நாடாளுமன்றம், ஜனாதிபதி,சமாதான செயலகம் என எதன் கீழும் இயங்காது. அது ஒரு சுயாதீனமான அமைப்பு என்று அண்மையில் தமிழீழ விடு தலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் கூறியுள்ள நிலையில் தனபாலவின் இந்த கருத்துமுக்கியத்துவம் பெறுகிறது.

(க-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஆசைகள் இல்லாத விருத்திகள் இல்லாத தூய மனதிலேயே ஆத்மாவின் பிரதி பிம்பத்தை நாம் பார்க்க முடியும். எனவே வைராக்கியத்தின் மூலம் நமது ஆசைகளை நாம் அறவே ஒழிக்க வேண்டும். அப்போதுதான் மனமும் அமைதியடைந்து நாம் ஆத்ம சாட்சாத்காரத்தைப் பெறவும் வழி ஏற்படும். அத்தகைய நிலையை அடைவதே யோகத்தின் குறிக்கோளாகும்.

சுவாமி விவேகானந்தர்




யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்களால் வெசாக் தினம் கொண்டாடப்பட்டது. மருத்துவபீடத்தில் அவர்களினால் அமைக்கப்பட்ட வெசாக் அலங்காரக் கூடுகளை படத்தில் காணலாம்.

# வவுனியா அரசியல்துறைக்கு புதிய பொறுப்பாளர்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக எஸ்.ஞானம் இன்றுமுதல் நியமிக்கப்படவுள்ளார்.

தற்போதைய வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் இடமாற்றம்பெற்றுச்செல்வதனால் அவரின் இட த திறகு வவுனியா மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் எஸ்.ஞானம் இன்று பதவி ஏற்பதாக வவுனியா அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் வவுனியா மாவட்டத்தின் அரசியல்துறைப்பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள நான்காவது பொறுப்பாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-4)


## யாழ்ப்பாணம், கொட்டடி
## வில்லூன்றி இந்து மயானம்

மேற்படி வில்லூன்றி இந்து மயானத்திற்கான பரிபாலன சபைத் தெரிவு யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா அவர்கள் தலைமையில் 24.05.2005 அன்று பி.பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற போது பரிபாலன சபைக்கான தெரிவு செய்யப்பட்ட நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்: திரு. நா.தனேந்திரன் அவர்கள்
உப தலைவர்கள்: 1. திரு. சோ.சீவரத்தினம் அவர்கள்
2. திருமதி ச.சித்திரலதா அவர்கள்
செயலாளர் : இ.திருக்கருணை அவர்கள்
உப செயலாளர் : திரு சி.நாகராசா அவர்கள்
பொருளாளர் : சி.சிவகுமார் அவர்கள்

**நிர்வாகசபை உறுப்பினர்களாக:**

பொ.இராஜபுலேந்திரன், வ.ஜேசுராசா, சி.பாஸ்கரன், கா.நாகலிங்கம், சி.பரமநாயகம், செல்வி த.கீதா, பொ.பரமநாதன் சி.கனகராஜா, இ.சற்குருநாதன், இ.இராசு, திருமதி க.கமலேஸ்வரி, கு.இந்திரகுமார், சு.நடராசா, ப.சந்திரன், சி.சிவராசா, செ.கோமளேஸ்வரி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

போசகர்கர்களாக சி.வி.கே.சிவஞானம், கி.மகாலிங்கம், சி.பாக்கியராசா ஆகியோரும் அடங்குவர்.

விளம்பர உதவி:
**கஜன் மிக்சர்**
10 சீனிவாசகம் வீதி, கொட்டடி (9571)


# வேலணையில் திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணையில் அண்மைக்காலமாக திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இரவு நேரங்களில் குழுக்களாக வரும் கள்வர்கள் திருட்டு முயற்சியில் ஈடுபட்டு வருவதாக கூறப்பட்டது. இதனால் இரவு நேரங்களில் மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர். (ச)

## பொதுக்கட்ட...

மாகாணக்குழுக்கள் மூலம் ஆழிப்பேரலையின் பின்னரான புனரமைப்புக்களை உரிய முறையில் மேற்கொள்ளமுடியும் என ஜே.வி.பி தனது யோசனையில் தெரிவித்துள்ளது. (க-9)

# அடுத்த மாத இறுதிக்குள் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

பட்டதாரிகளை ஆசிரியசேவையில் இணைத்துக்கொள்வதற்காக கடந்த வாரம் நடத்தப்பட்ட பரீட்சைப்பெறுபேறுகளை விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய பரீட்சைத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளை அடுத்தமாதம் இறுதிப்பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனையடுத்து பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட்டு நேர்முகப்பரீட்சைகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பரீட்சை முடிபுகள் தனித்தனியாக பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

# பி.பி.சி ஆனந்தி ஓய்வு பெற்றார்

பி.பிசியின் தமிழோசையில் அறிவிப்பாளராக கடந்த 30 வருடகாலமாக பணியாற்றி வந்த யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஆனந்தி தனது பணியிலிருந்து நேற்று ஓய்வுபெற்றார்.

தமிழோசையில் முக்கியமான நிகழ்ச்சிகள் பலவற்றை அவர் தொகுத்துவழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-8)

## திருமலை கரையோரப்....

நிலைமைகளை சமாளிப்பதற்காக ஆயிரத்து 500றக்கும் மேற்பட்ட படையினர் மூலை முடுக்குகள் எங்கும் குவிக்கப்பட்டுள்ளனர்.

விசேட பயிற்சிபெற்ற பொலிஸாரும் வரவழைக்கப்பட்டுள்ளனர். திருகோணமலையில் நேற்று கடைகள் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நாளைமுதல் மீண்டும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படலாம் என்ற அச்சத்தில் மக்கள் அத்தியாவசியமான பொருட்களை கடைகளில் கொள்வனவு செய்துவருகினறனர். இதனால் நேற்றுக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவியது.

நேற்றும், நேற்றுமுன்தினமும் விடுமுறை தினமாகக் காணப்பட்டதால் மக்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியவில்லை. இதனால் ஹர்த்தால் இன்று மேற்கொள்ளபடவில்லை என தமிழ் மக்கள் பேரவையினர் தெரிவித்துள்ளனர். (ச)

## ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு...

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தும் நோக்கிலேயே அக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பான விட யங்களை ஜனாதிபதி முன்வைத்தபோதிலும் அதனை நடைமுறைப்படுத்தும் விதம் அல்லது உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் என்பன குறித்து அரசாங்கத்தால் தமது கட்சிக்கு தெளிவுபடுத்தவில்லை என்று அவர் தெரிவித்தார்.

சுனாமி நிவாரணங்களை விநியோகிப் பதற்காக பொதுக்கட்டமைப்பு ஒன்றினை அமைப்பதற்கு தமது கட்சி இணங்குவதாக தெரிவித்த பியசேன இது தேசிய மட்டத்திற்கு விஸ்தரிக்கப்படக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார். (ச-4)


**திருமணக்கார் [குளிரூட்டியது] வாடகைக்கு**

★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள்
★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467

**நாதன்ஸ் சினிமா**
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள்
பிரகாஷ்ராஜ், நவதீப், தேசாஜெயராம், ஷமிக்சா மற்றும் பலர் நடித்த
**அறிந்தும் அறியாமலும்**
கா.நே: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**
22.05.2005 முதல்
சிம்பு, திவ்யா நடித்த



கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

**மனோகரா யாழ்.**
06.05.2005 முதல்
சரத்குமார், ரமேஷ், பூஜா மற்றும் பலர் நடித்த




கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு





## புங்குடுதீவு கிழக்கு வீராமலை வயலூர்
## ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் (10ம் வட்டாரம்)
# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



இலங்கையின் வடபால் சைவமும், தமிழும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்தின் சப்தத்தீவுகளில் சொர்ணத்தீவு சொர்ணபூமி என விளங்கும் புங்குடுதீவு கிழக்கு வீராமலை வயலூரில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுக்கு நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் வைகாசி மாதம் 15 ஆம் நாள் 29.05.2005 ஞாயிற்றுக்கிழமையும், ஷஷ்டி திதியும், அமிர்தசித்த யோகமும் கூடிய 11.10 முதல் 12.45 வரையுள்ள சிம்மலக்கின சுபமுகூர்த்தவேளையில் விநாயகர், வள்ளி தேவசேனா சமேத சிங்காரவேலன் சுவாமிக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அதன்பின் முன்னுள்ள கிரிகைளிலும் கலந்து முருகப்பெருமானை தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

## கிரியா நிகழ்ச்சி விபரம்

**26.05.2005 வைகாசி 12ம் நாள் வியாழக்கிழமை**

காலை: கணபதி பூஜை, புண்ணியாவாசனம், தன பூஜை, திரவிய வியாகம், கணபதி ஹோமம், ரக்ஷேக்கணஹோமம் கோவாசம், நயலோன் மீனம், தான்யாதிவாசம், ஜலாதிவாசம்.

மாலை: திசாஹோமம், கிராமசாந்தி, சாந்திஹோமம், பிரவேசபலி சயனா ரோகணம்.

**27.05.2005 வைகாசி 13ம் நாள் வெள்ளிக்கிழமை**

காலை: நவக்கிரக ஹோமம், சூர்யாக்கினி சங்கிரகணம் வேதிகாஸ்தாபனம், கங்கா பூஜை, வாஸ்து பூஜை,

மாலை: ஸ்தலசுத்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரச்சாபந்தனம், கடஸ்தாபனம், யாகபூஜை ஹோமம் மாலை 6 மணிக்கு தீபஸ்தாபனம், தூபிஸ்தாபனம், யந்திரபிம்பஸ்தாபனம், தீபாராதனை திருமுறை பாராயணம், பிரசாதம் வழங்கல்.

**28.05.2005 வைகாசி 14ம் நாள் சனிக்கிழமை**

காலை: ஸ்தலசுத்தி, தைலாப்பியங்கம் (எண்ணைக்காப்பு சாத்துதல்), யாக பூஜை ஹோமம், திருமுறை பாராயணம், பிரசாதம் வழங்கல்.

மாலை: ஸ்தலசுத்தி, விசேடசாந்தி, யாகபூஜை, பிம்பசுத்தி ஹோமம், சத்துரு சம்கார ஹோமம், தீபாராதனை, பிரசாதம் வழங்கல்.

**29.05.2005 வைகாசி 15ம் நாள் ஞாயிற்றுக்கிழமை**

காலை: யாகபூஜை, ஸ்பர்சாகுதி, பூர்ணாகுதி, அந்தர்பலி, தீபாராதனை, ஸ்தோத்திர தேவார பாராயணம் கும்பங்கள் வீதிஉலா 11.30 மணிக்கு ஸ்தாபி அபிஷேகம் 12.05க்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும், தசமங்கள தரினம், ஆசீர்வாதம், கும்பாபிஷேக மலர் சமர்ப்பணம் பிரசாதம் வழங்கல், மஹா அபிஷேகம் விசேடபூஜை அன்னதானம் வழங்கல்.

மாலை: திருக்கல்யாணம் வீதிஉலா நடைபெறும்.

ஆலய பரிபாலன சபையினர்

(C-1411)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.